விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 16 வியாழக்கிழமை (02.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


## அதிகளவு உரிமையை எதிர்பார்க்காதீர்

# விக்னேஸ்வரன், ஹக்கீமுக்கு மல்வத்து பீடம் எச்சரிக்கை



**(கொழும்பு) வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் ஸ்ரீ.ல.மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு அதிகாரங்களை கோரி நாட்டைத் துண்டாட முயற்சிக்க வேண்டாம் என்று மல்வத்து பீடம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவரான மிசெல் ஜே.சீசன் நேற்று முன்தினம் மல்வத்து பீடத்தின் பிரதி சங்க நாயக்க நியாங்கொட விஜித தேரரைச் சந்தித்த போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இந்த நாட்டை துண்டாடும் எந்த முயற்சியிலும் இறங்க வேண்டாமென வடமாகாண முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரனிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அனைவரிடமும் எடுத் 20ஆம் பக்கம் பார்க்க....



## குடும்ப ஆட்சியால் ஊழல் - ஹெல உறுமய

(கொழும்பு)

நாட்டில் தற்போது குடும்ப ஆட்சி நடைபெறுவதால் ஜனாதிபதியின் குடும்பத்தினர் என்ன நடக்கிறது என்பது கூட அறியாதவர்களாக இருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் வெளியாகும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அமைச்சுக்களில அதிகளவான அமைச்சுக்கள் ஜனாதிபதக்கும் அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷவிற்கும் மிடையில் பகிரப்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுகள் வெறுமையான அமைச் 20ஆம் பக்கம் பார்க்க....



## சொத்துக் குவிப்பு
## மன்னிக்க முடியாத குற்றம்

07ஆம் பக்கம் பார்க்க...

## ஹயஸ் விபத்து ; இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹயஸ் வான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இருவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்து நேற்று அதிகாலை 3.00 மணியளவில் மாதம்பை பகுதியில் இடம்பெற்றது. கொழும்பில் உள்ள வைத்தியசாலை 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயலலிதா ஜாமீன் மனு 7-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(பெங்களூர்)

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டு, பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் இருக்கும் ஜெயலலிதாவின் ஜாமீன் மீதான விசாரணையை வழக்கமாக மேல் முறையீட்டு மனுக்களை விசாரிக்கும் டிவிஷன் பெஞ்சுக்கு மாற்றி விடுமுறை கால நீதிபதி ரத்னகலா உத்தரவிட்டுள்ளார்.

இதனால், இந்த வழக்கு, அக்டோபர் 7ஆம் திகதிக்கு விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெயலலிதாவின் ஜாமீன் மனு மீதான விசாரணை நேற்று காலை 10.30 மணியளவில் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் விடுமுறை கால நீதிபதி ரத்னகலா முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, ஜெயலலிதா சார்பாக வழக்கறிஞர் ராம் ஜெத்



மலானி ஆஜரானார். அரசுத்தரப்பு வழககறிஞராக பவானி சிங் ஆஜரானாரா.

அரசுத் தரப்பின் சார்பில் மனுத் தாக்கல் செய்கிறீர்களா என நீதிபதி கேட்டதும், 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயலலிதாவை விமர்சனம் செய்ய இங்கு எவருக்கும் அருகதையில்லை

### அரசாங்க எலிகளுக்கு மனோ கண்டனம்

(கொழும்பு)

அதிமுக தலைவரும், முன்னாள தமிழக முதல்வருமான ஜெயலலிதாவை விமர்சனம் செய்ய இங்கே எந்த ஒரு அரசியல்வாதிக்கும் அருகதை இல்லை. குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்கு கொஞ்சமும் அருகதை இல்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.


ஊழல், குடும்ப ஆட்சி, வீண் விரயம், அதிகார துஷ்பிரயோகம், எதிரணியினர் மீது வன்முறை, ஊடக அடக்குமுறை, மனித உரிமை மீறல், சட்ட ஆட்சி இன்மை, சொந்த வயிறுப்பாடு தேவைக்காக சொந்த மக்களையே விற்று சாப்பிடும் அரசியல ஆகியவற்றில் உலக சாதனை செயதுள்ள இந்த வெட்கங்கெட்ட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்கு கொஞ்சமும் அருகதை இல்லை.

அதிமுக தலைவர்ஜெயலலிதாவை பார்த்து எள்ளி நகையாடவும், சாபமிடவும இங்கே 20ஆம் பக்கம் பார்க்க....

O/L உடன்
பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சுவிஸ், மலேசியா, சிங்கப்பூர், டுபாய் சென்று இலட்சக்கணக்கில் சம்பாதிக்க
50,000 /= வருமானத்துடன் வெளிநாட்டு
SEGi University
UK சான்றிதழ்
ஹொட்டேல் பயிற்சி
(வெற்றிகரமான 8-வது அணி)
Certificate Level - Diploma Level - UK Degree
3 வருட விசாவுடன் மாதங்களுக்குள் பயணம்
IELTS, வங்கிப்பண வைப்பு இல்லை (வயதெல்லை : 35)
ஒக்டோபர் 3-8 வரை வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
யாழ் [illegible]னம்ஸ் ஹொட்டேல் ஒக். 3 & 8
கிளிநொச்சி சோலைவனம் ஒக். 4 & 7
வவுனியா நெல்லிஸ்ரார் ஒக். 4 & 7
மன்னார் R.D.H.S. மண்டபம் ஒக். 6
SIKARAM
Education Abroad & Visa Solutions
www.sikaram.lk
077 36 16 798/ 021 222 00 11
(C-8639)
Sikaram (Pvt) Ltd., No.275-2/1 & 2/2, Clock Tower Road, Jaffna (Behind Jaffna Hospital)

## கூட்டமைப்பின் கோரிக்கையை இந்தியப் பிரதமர் நிராகரிப்பு

### தன்னிடம் கூறியதாக மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை அரசுடன் 'தாங்கள் பேச்சு நடத்துவதானால் இந்தியா விசேட பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நிராகரித்திருக்கிறார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார். 20ஆம் பக்கம் பார்க்க....

## மூதாட்டியை தாக்கி பணம், நகை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி பகுதியில் வீட்டிலிருந்த மூதாட்டியை தாக்கிவிட்டு அவரிடமிருந்து 5 பவுண் நகை மற்றும் 14 ஆயிரம் ரூபாய் பணம் என்பன நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் நேற்று புதன்கிழமை தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த நவரட்ணம் விஜயதேவி (வயது 71) என்ற மூதாட்டி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினார்கள்.

மேற்படி வீட்டில் மூதாட்டியும், அவருடைய உதவியாளர் ஒருவரும் வசித்து வந்தனர். 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPEED
PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-8627)



2 மணித்தியாலத்தில்
# கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள்
திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.



நல்லின ஆடு
# விற்பனைக்கு
நல்லின பால் ஆடு இரு கிடாய்
குட்டிகளுடன் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
0777 162685
(7931)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த**

இளங்குமார்
தனஞ்செயன்
172 புள்ளி
(கிளி/பரந்தன்
இ.ம.வி)





இளஞ்சுரேஸ்
தமிழ்மதி
163 புள்ளி
(கிளி/வட்டக்கச்சி
ஆரம்ப
வித்தியாலயம்)

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்கள் மேன்மேலும் சித்திகளைப் பெற்று கல்வியில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் : உறவினர்கள்*

# சிறுகதைப் பட்டறை

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய
சிறுகதைப் பட்டறையின் 2-வது அமர்வு எதிர்வரும்
4.10.2014 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு
இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
முதல் அமர்வில் பங்குபற்றியவர்கள்
சிறுகதையுடன்-வருக.

செயலாளர் திருமதி கோகிலா மகேந்திரன்

(7927)

# தேர்தலில் மோசடி



(பதுளை)

ஊவா மாகாண சபைத் தேர்தலில் வாக்கு மோசடி இடம் பெற்றுள்ளதாக ஜன நாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சிக்குத் வாகளித்த வாக்காளர்களிடம் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சத்தியக் கடதாசி மூலம் அதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டதாக சரத் பொன்சேகா இதன் போது தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கை மூலம் குறிப்பிடத்தக்களவு சத்தியக் கடதாசிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர சுட்டிக்காட்டினார்.

தமது முதன்மை வேட்பாளரின் சொந்த இடமான வெலிமடை தொகுதியில் தேர்தல் முடிவுக்கு அமைய, 492 வாக்குகள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும், கடந்த சில தினங்களில் மாத்திரம் அவரது வீட்டிற்கு வருகை தந்து ஆயிரத்து 20 பேர் சத்தியக் கடதாசிகளை கையளித்துள்ளதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இதற்கமைய, கடந்த மாகாண சபைத் தேர்தலில் வாக்கு மோசடி இடம் பெற்றுள்ளமை தெளிவாகியுள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# நன்றி தெரிவிக்கின்றோம்

2012ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்ளீர்க்கும் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளீர்க்கப்படாது விடப்பட்ட யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் விடயத்தில் கவனம் செலுத்தி எமக்குப் பட்டதாரிப் பயிலுனர் நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக

◎ இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி
மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும்

◎ பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்
கௌரவ டபிள்யூ.டி ஜோன் செனவிரட்ண அவர்களுக்கும்

◎ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்

◎ பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்
மதிப்புக்குரிய பி.வி.அபயக்கோன் அவர்களுக்கும்

மற்றும்

◎ யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மதிப்புக்குரிய சுந்தரம் அருமைநாயகம் அவர்களு[illegible]
மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்

**உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகள் - யாழ்.மாவட்டம்**

# கிளி/முருகானந்தா கல்லூரி

முரசுமோட்டை - பரந்தன்

**தரம் 6 அனுமதி - 2015**

2015 ஆண்டு தரம் 6 வகுப்புக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 15.10.2014ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு

நீண்டதூர மாணவர்களின் நலன்கருதி எமது கல்லூரிக்கு றெட்பாணா (விசுவமடு) → பாடசாலை வரை அரச பேருந்துப் பணி 15.09.2014ல் இருந்து நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: 021 2060202 அதிபர்

(C-8637)

# அழைப்பிதழ்



## மாமனிதர் குமார் பொன்னம்பலம்

அவர்களது 76-வது பிறந்த தினத்தை முன்னிட்ட ஞாபகார்த்த
நினைவுப் பேருரை

**தலைப்பு**

"ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணையும் தமிழ் மக்களின் எதிர்காலமும்"

**உரை நிகழ்த்துபவர் :**

க.ச.இரத்தினவேல் சிரேஷ்ட சட்டத்தரணி

காலம் :- 04.10.2014 சனிக்கிழமை

நேரம் :- பி.ப 3.30 - 6.30 மணி வரை

இடம் :- திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகம்,
இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு**
**இல. 136, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்புகளுக்கு :- 0773024316**

(8635)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**சாம்குமார் தீலக்ஷாயினி**

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி
செல்வி சாம்குமார் திலக்ஷாயினி
அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 184 மதிப்பெண்களைப்
பெற்று விசேட சித்தி பெற்றமையை
பாராட்டுவதுடன் அவர் சுதுமலை
புவனேஸ்வரி அம்பாளின் அருள்
பெற்று மேன்மேலும் உயர்வுகளை
பெற ஆசி கூறி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அப்பம்மா, சித்தா, சித்தி,
அண்ணா-எஸ்.துஷாந்

(7932)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**யுவராஜ் யுவிஸ்ரன்**

யாழ். தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலய மாணவன்
செல்வன் யுவராஜ் யுவிஸ்ரன்
அவர்கள் தரம் ஐந்து புலமைப்
பரிசில் பரீட்சையில் 169
புள்ளிகளைப் பெற்று விசேட சித்தி
பெற்றமையை பாராட்டுவதுடன்
அவர் மடுமாதாவின் அருளைப்
பெற்று மேன்மேலும் உயர்வுகளைப்
பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா, தாத்தா,
பெரியப்பா, மாமா, அப்பம்மா,
அன்ரிமார்.


கோணப்புலம்,
நலன்புரி நிலையம்,
மல்லாகம்.

(7930)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
28.02.1952

மறைவு:
02.09.2014

## அமரர் ஜெயரட்ணம் சிவனேஸ்வரி


கடந்த 02.09.2014 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி ஜெயரட்ணம் சிவனேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(7921)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
26
07
1945

மறைவு
04
09
2014

## அமரர்: பாலசுப்பிரமணியம் யோகச்சந்திரன்

அமரர் பாலசுப்பிரமணியம் யோகச்சந்திரன்
அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை
வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு
கீரிமலை தீர்த்தக் கரையிலும் நண்பகல் 11
மணியளவில் அவரது இல்லத்தில்
நடைபெறும் ஆத்ம சாந்தி
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

கொத்தியாள் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

தகவல்
குடும்பத்தினர்.

(7806)

# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## NPGJ -0031 பாரவூர்தி விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான லேடன் NPGJ-0031 இலக்க பாரவூர்திக்கு மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. மேற்படி பாரவூர்தியைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 15.10.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
2. கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
3. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறிக்கான கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தின் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

தொ.பேசி.இல. 021 225 0126

பொதுமுகாமையாளர்
சங்கானை, ப.நோ.கூ.சங்கம்.

(சி-8631)

# நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்களுக்கு எங்களிடமிருந்து பல வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு (விசேடம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு) அநுராதபுரம், கதுறுவெல, குருநாகல், நிட்டம்புவ, பஸ்யாலை, மீரிகம, ஜாஎல, அலுத்கம, நாரம்பிட்டிய, பாணந்துறை, அவிசாவளை, ஹங்வெல, நுகேகொட, பியகம போன்ற பல பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ சொக்லெட்/ கண்ணாடி/ கிளவுஸ்/ கூரை/ சிம்/ தேங்காய்பால்மா/ டயர்/ ஆடை/ PVC/ பானம்/ பிஸ்கட்/ ஐஸ்கிறீம்/ பெயின்ட் போன்ற பல தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000-35000. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். சிங்களம், கல்வி அவசியம் இல்லை. நண்பர்கள் குழுக்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவர்.

077-6838231-வடமாகாணம்
யாழ்ப்பாணம்-0779141804
மட்டக்களப்பு-0770699492
முல்லைத்தீவு- 0774567082

(சி-8632)

# இராசி பலன்

02.10.2014
(புரட்டாதி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.59 மணிக்கு
அட்டமி முற்பகல்- 8.48 மணிவரை
பூராடம் முன்னிரவு -7.31 மணிவரை
இராகுகாலம் -1.32-3.02 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
மகா நவமி விரதம்

வளவன்

**மேடம்:** தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**இடபம்:** மனக்குழப்பம் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, முயற்சிகள் தாமதமாகும்.

**மிதுனம்:** நட்பு வட்டம் விரிவடையும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு.

**கடகம்:** தொலைபேசி மூலம் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், வழிபாடு சிறப்பினை வழங்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் தேவை களை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி:** பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள்.

**துலாம்:** சேமிப்பை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், வார்த்தைகளில் நிதானம் தேவை, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பணவரவால் சந்தோசமடைவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்கு பிரதேச கலாசார பேரவை கீதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலி.தென்மேற்கு பிரதேச கலாசார பேரவையானது தமது பிரதேச வளங்களை உள்ளடக்கிய பிரதேச கீதத்தை உருவாக்க தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தமது கீதத்தை வலி.தென்மேற்கு கலாசாரப் பேரவைத் தலைவருக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


பிரதேச கீதம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச கீதம் மரபுவழிப் பட்டதாகவோ, புதுக்க்விதை சார்ந்ததாகவோ அமையலாம்.

மரபுவழிப்பட்டதாயின் பல்லவி, சரணம் என்ற அமைப்பில் அமைதல் அவசியம். கீதம் 12 அடிகளுக்கு மேற்படாமல் வலி. தென்மேற்கு பிரதேசத்தின் பண்பாட்டியல் அம்சங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

ஆக்கம் சுய ஆக்கமாகவும் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். இக் கீதத்தை இயற்றுபவர் வலி.தென்மேற்குப் பிரதேசத்தைப் பிறப்பிடமாக அல்லது சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

கீதத்தின் சொற்கட்டமைப்பில் ஏதேனும் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்படின் மாற்றங்களை மேற்கொள்ளும் முழு உரிமையும் வலி தென்மேற்கு கலாசார பேரவைக்கு உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)




# சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நிகழ்வு

## பத்திரிகை செய்திகளை காட்சிப்படுத்த தடை







யாழ்.போதனா வைத்தியசாலையில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுக்காலை தொடக்கம்நடைபெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட பெண்கள் சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழிப்புணர்வில் சிறுவர்களினை பாதுகாக்கும் பொருட்டும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் உருவப் பொம்மைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவ் உருவப் பொம்மைகளில் பத்திரிகைகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் வெளிவந்த காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவை முதலில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் அகற்றப்பட்டிருந்தன.

அவற்றில் காரைநகரில் கடற்படையினரால் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பத்திரிகைகளில் பிரசுரித்த செய்திகளும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. இதனை காரணங்காட்டியே அவற்றினை காட்சிப்படுத்த வேண்டாம் என நிர்வாகம் கூறியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்வாயில் வெளிநோயாளர்கள் பிரிவு போன்றவற்றில் இவ் உருவப் பொம்மைகள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றில் என்னைக் காயப்படுத்தாதீர்கள், என்னை தொட வேண்டாம், துஷ்பிரயோகம் செய்யாதீர்கள், சிறுவர் துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து போன்ற வாசகங்களும்காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவற்றோடு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும் காட்சிப் படுத்தப்படிருந்தன.

எனினும்அங்குவந்தயாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக த்தினர் அப்பத்திரிகைசெய்திகளினை அகற்றுமாறும் கூறி அவற்றை தாங்களாகவே அகற்றுவதோடு பெண்கள் அமைப்பினர் வைத்திருந்த புகைப்படக் கருவியினையும் சோதனையிட்டனர்.

இவை தொடர்பில் ஊடகவியலாளர்களினால் யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ.பவானந்தராஜாவிற்கு தெரியப்படுத்தப்பட்டதும் சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து பார்வையிட்டார்.இது தொடர்பில் பிரதிப்பணிப்பாளர்தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவருகின்ற செய்திகள் பாதிக்கப்படுபவர்களின் நிலையினை மேலும் அதிகரிப்பதற்கு வழிகோலுகின்றன ஆகையினால்தான் அவற்றை அகற்றுமாறு பணித்தோம்.

மேலும் குறித்தவிழிப்புணர்வினை வைத்தியசாலையில் தொடர்ந்து நடத்துவதற்கு நிர்வாகம் அனுமதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இவ் விழிப்புணர்வுநிகழ்வு யாழ்.போதனா வைத்தியசாலை, திருநெல்வேலி சந்தை, நல்லூர் போன்ற இடங்களிலும் நேற்றைய தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# மனிதவுரிமை ஆணைக்குழு முதியோர் தின செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டிற்கான சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவானது முதியோரது உரிமைகளை பாதுகாத்தல், மேம்படுத்தல் தொடர்பாக பிராந்தியங்கள் தோறும் பல செயலமர்வினை நடத்த தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், முதியோர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் என்போரை உள்ளடக்கி இந்த செயலமர்வை கைதடி அரச முதியோர் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடத்தவுள்ளது.

இந் நிகழ்வில் பங்குபற்றி தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# முன்பள்ளி திறப்பு விழாவும் வாணிவிழா நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையின் வாணிவிழாவும் முன்பள்ளி திறப்பு விழாவும் நாளை வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யாவும் சிறப்பு விருந்தினராக வேலணை மேற்கு நடராஜ வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகன், தலையாழி ஞானவைரவர் ஆலய தலைவர் வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை தலையாழி ஞானவைரவர் ஆலய பிரதம குரு சத்தியாக்குருக்கள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வின் விசேட நிகழ்வாக முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பாலகர்களுக்கான வித்தியாரம்பம் இடம்பெறவுள்ளது. (இ)

# தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களின் பெறுபேறுகள்-2014

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

யு.ரிசோபிதன்-191, எஸ்.திலக்ஷாயினி-184, கே.குகராஜன்-177, எஸ்.கிருத்திகா-175, பி.அனுசாந்-174, எஸ்.கிருத்திகா-175, பி.அனுசாந்-174, எஸ்.வேணுவிதுஜா-174, எஸ்.வைஸ்ணவி-173, பி.கஜானன் -170, எம்.விசாகன்-170, க.மயுரேஸ்-169, ஆர்.டிசானி-167, சி.சுலக்சினி-166, பி.கிருஷாந்-163, எஸ். டெல்வின்-161, எஸ்.லெளசிகன்-160, ஐ.வைஸ்ணவி-160, எஸ்.சுருதி-160, பி.அபிஷாயினி-159, பி.மிதுலா-159

யா/கரவெட்டி கிழக்கு அ.த.க.பா

பி.டயானா- 159




# வடமராட்சி பகுதியில் இலக்கு வைக்கப்படும் நீர்ப்பம்பிகள்

## தொடர்கிறது திருட்டு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சிப் பகுதிகளில் தொடர்ச்சியாக நீர்ப்பம்பிகள் (மோட்டர்) திருடப்பட்டு வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் கடந்த 29 ஆம் திகதி அல்வாயில் 4 நீர்ப்பம்பிகளும், துன்னாலையில் 2 நீர்ப்பம்பிகளும் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதால் அப்பிரதேசமக்கள்பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பெரும்பாலும் பகல் வேளைகளில் இத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் வேலைகளுக்கு செல்வோர் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகநெல்லியடிப்பொலிஸாருக்கு அப்பிரதேச மக்களால் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பொலிஸார் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்ததுடன் மேலும் தங்களது பிரதேசங்களில் பகல் வேளைகளில் சந்தேகத்திற்கிடமான நபர்கள் நடமாடினால் உடனடியாக 119 அல்லது 118 எனும் அவசர தொலைபேசி இலக்கங்களுக்கும் 012-226 3222 எனும் தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளும்படியும் நெல்லியடி பொலிஸார் மக்களிடம் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வெகு விரைவில் இத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வோம் எனவும் நெல்லியடிப் பொலிஸார் மக்களிடம் உறுதி அளித்தனர்.

ஆனால் மக்கள் தமது பகுதிகளுக்கு பகல் வேளை மட்டுமல்லாது இரவு வேளைகளிலும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை அவசியம் என பொலிஸாருக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (இ-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனாவின் கொள்கையுடன் அரசாங்கத்திற்கு உடன்பாடு இல்லை

## அமைச்சர் கெஹலிய விளக்கம்

(கொழும்பு)

**சிங்கள பௌத்த கடும் போக்கு அமைப்பான பொதுபல சேனாவின் கொள்கைக்கும் அரசிற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனவும் அது அந்த அமைப்பின் தனிப்பட்ட கொள்கை எனவும் ஒரு இனம் அல்லது ஒரு மதம் ஒரு சமூகத்திற்கு எதிராக ஏதும் தடை இருந்தால் அது தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ நடைபெறலாம். ஆனால் இதனை ஊர்ஜிதப்படுத்த முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் குழுக்கூட்டத்திலும் இது தொடர்பில் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா? முடியாதா? என உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள தகவல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை. அதேவேளை ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ இடம்பெறலாம். ஆனால் இதனை ஊர்ஜிதம் செய்ய முடியாது. தேர்தல்களை நடத்துவது தொடர்பாக அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

அதேபோல அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுக்கூட்டத்திலும் தேர்தல்கள் தொடர்பில் எவ்விதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என ஜே.வி. பி. யினால் கூற முடியாது.



இது தொடர்பான முடிவு எடுத்த பின்னர் அதனை உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும். பங்காளிக்கட்சிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிடலாம். ஆனால் அமைச்சரவையில் கூட்டுப்பொறுப்புடனேயே தீர்மானங்கள் எடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் போது எமது வேட்பாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே களமிறங்குவார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஐ.தே. கட்சி எம்.பி. கரு ஜயசூரிய தெரிவித்த கருத்துக்கள் அரசியல் ரீதியானவையே.

ஜனாதிபதி மீண்டும் போட்டியிட்டால் அவரது வெற்றியை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாது என்பது அரசியல் ரீதியான கருத்தாகும். இவ்வாறான அரசியல் கருத்துக்களுக்கு அரச தரப்பாக பதில் கூற முடியாது.

அதேவேளை ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தி வருகிறோம்.

### ஜெயலலிதா விடயம்

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் விடயம் இந்தியாவின் சட்டத்துறையோடு தொடர்புபட்டது.

அத்தோடு நாம் இந்திய மத்திய அரசாங்கத்துடன்தான் நேரடியாக தொடர்புகளை கொண்டுள்ளதோடு நட்புறவை பேணி வருகின்றோம். மாநிலங்களின் ஆட்சியாளர்களுடன் தொடர்புகளை பேணுவதில்லை. ஜெயலலிதாவின் பிரச்சினை இலஞ்சம் ஊழல் தொடர்பானது.

இலங்கையிலும் இலஞ்ச ஊழல் திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதோடு அது தொடர்பான நபர்களிடம் வாக்கு மூலமும் பெறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களது வாக்கு மூலங்கள், சாட்சியங்கள் வழக்கு தொடர்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்பதால் வழக்கு தொடர்வதை திணைக்களம் கைவிட்டுள்ளது.

### பொதுபலசேனா

பொதுபல சேனாவைப் பொறுத்தவரை அவர்கள் தமது தனிப்பட்ட கொள்கைகளை வெளியிடுகின்றனர். அதனோடு அரசுக்கு தொடர்பில்லை. நாட்டில் அனைத்து இன, மத மக்களுக்கும் சம உரிமை வழங்குவதே அரசின் கொள்கையாகும். இது நாட்டின் அரசியலமைப்பிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை குறிப்பிட்ட இனம் அல்லது மதம் ஒரு சமூகத்திற்கு எதிராக ஏதும் தடையாக இருக்குமானால் நெருக்கடிகளை கொடுக்குமானால் அது தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியுமென்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (இ)


## காப்புறுதிச் சேவையில் 450 காப்புறுதி ஆலோசகர்களை இணைத்துக்கொள்ளல்

சர்வதேச தரத்திற்கொப்பாக காப்புறுதி முகாமைத்துவம், உளவியல், ஆங்கிலம், சமூக சேவை ஆகியவற்றில் பயிற்சி பெற்றவரும் 54 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் காப்புறுதியின் முன்னோடியும் பலமானதுமான அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அகில இலங்கை அதி சிறந்த அமைப்பாளர் விருது பெற்று இங்கிலாந்து சென்று திரும்பிய 34 வருடங்கள் காப்புறுதிச் சேவையைப் பூர்த்தி செய்தவரும் 25 வருடங்கள் குழுத் தலைவராக செயற்பட்டவருமான சிரேஷ்ட குழு நிதியியல் ஆலோசகரின் கீழ் செயலாற்ற காப்புறுதி ஆலோசகர்கள் தேவைப்படுகின்றனர்.

அகில இலங்கை முழுவதும்

### தகைமைகள்

1. G.C.E O/L (கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி A/L
2. கணனி பற்றிய அறிவு
3. ஆங்கிலத்தில் காப்புறுதி விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் ஆற்றல்.
4. நாளாந்தம் ஆகக் குறைந்தது 2 மணித்தியாலங்கள் காப்புறுதிச் சேவைக்காக அர்ப்பணிக்கக் கூடிய ஆற்றல்
5. வயது: 18 வயதிற்கு மேல் (18-65)

### எம்மால் உருவாக்கப்பட்ட காப்புறுதி ஆலோசகர்கள் பெற்ற நன்மைகள்

1. சேவைக்கட்டணமாக மாதாந்தம் 3 இலட்சத்திற்கு மேல்
2. அகில இலங்கை, யாழ். பிராந்தியம், நெல்லியடி கிளை அலுவலகம் ஆகியவற்றில் காப்புறுதி ஆலோசகருக்கான போட்டிகளில் முதலிடம் பெற்றமை
3. இங்கிலாந்து. அமெரிக்கா, கனடா , பிரான்ஸ், வியட்நாம், சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு காப்புறுதி நடவடிக்கைகளுக்காக சென்றமை.

*முக்கிய குறிப்பு:- பொருத்தமானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

சேவையாற்ற விரும்பும் அலுவலகம் (உ+ம்:- யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, பம்பலப்பிட்டி, புத்தளம், சிலாபம்) தொலைபேசி இலக்கம், கிராம சேவகர் பிரிவு இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையுடன் (Bio Datas) விண்ணப்பங்களை 15.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(7926)

லயன் சி.ந.கதிர்வேலு (JP)
"நயினைக்கதிர்"
தேனாவளவு, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 104 உயரம்: 5'10"
தகைமை/தொழில்: பட்டதாரி/ பொறியியளாளர்
தொ.இ: B/3685

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 29 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் 8ம் தரம் (கட்டார்)
தொ.இ: B/3686

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 44 1/4 செவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: MSC/ BSC/ தொழில் அதிபரும், இயக்குனரும்
தொ.இ: B/3687

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 28
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/3690

**மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா:27 ½ உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி/ கணக்காளர்
தொ.இ: G/3676

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 23 1/2 உயரம்: 4'8"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/3678

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 3
தகைமை/தொழில்: வைத்தியர்
தொ.இ: G/3679

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 46 1/4 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L உதவி முகாமையாளர்
தொ.இ: G/3680

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தாங்கிய பிக்குகளால் அச்சத்தில் அல்வத்தை மக்கள்

## பிரதேசசபை உறுப்பினர் ஆதங்கம்

(கொழும்பு)

மாத்தளை பண்டாரவளையை அண்மித்ததான அல்வத்தைப் பிரதேசத்தில் துப்பாக்கிகள் சகிதம் பிக்குகளின் நடமாட்டம் இருந்து வருவதால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போது நெற்றியில் துப்பாக்கியை வைத்து அசசுறுத்தப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை வாபஸ் பெறும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறேன் என்று ரத்தோட்டை பிரதேச சபை உறுப்பினர் திலக்குமார சிறி தெரிவித்தார்.

அல்வத்தைப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற 50 ஏக்கர் காணிப் பகுதியிலேயே மேற்படி ஆயுதம் தாங்கியோரின் நடமாட்டம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரத்தோட்டை பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் கடந்த 29 ஆம் திகதி காலை அதன் தலைவர் ஜயந்த புஸ்பகுமார தலைமையில் நடைபெற்ற போதே உறுப்பினர் குமாரசிறி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக நான் பிரதிநிதித்துவப்படுத்தும் அல்வத்தைப் பகுதியில் சீருடை தரித்த பிக்குமார் சிலர் துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் நடமாடித் திரிகின்றனர். இதனால் அங்குள்ள மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

உயர் ரக வாகனங்களில் வந்திறங்கும் இவர்கள் இங்கு கைவிடப்பட்ட நிலையிலுள்ள சுமார் 50 ஏக்கர் காணிப் பகுதியிலேயே இவர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது.

இது பற்றி பொலிஸாரிடம் நான் முறைப்பாடு செய்திருந்தேன். இதனால் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் செய்யப்பட்டு எனது பொலிஸ் முறைப்பாட்டை வாபஸ் பெற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டேன்.

குறிப்பிட்ட காணிப் பகுதியின் உரிமையாளர் வெளிநாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இக்காணிப் பகுதியில் விஜயபால மன்னர் காலத்தில் அமைக்கப்பட்ட குகையுடன் கூடிய சுரங்கப்பாதையொன்று இருப்பதாக கர்ண பரம்பரைக் கதை ஒன்றும் உண்டு.

இங்கு ஏதேனும் புதையல் இருக்கலாம் என்றும் அதை தோண்டி எடுப்பதற்கே இந்த ஆயுததாரிகள் முயன்று வருவதாக மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

எது எப்படியாயினும் காவி உடை தரித்துக்கொண்டு பயங்கர துப்பாக்கிகளை பகிரங்கமாகவே ஏந்தித் திரிவதும் அதன் காரணமாக மக்கள் மத்தியில் திகிலை உருவாக்குவதையும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே, பிரதேச சபை இவ்விடயத்தில் தலையிட்டு மக்கள் மத்தியில் அமைதிச் சூழலை ஏற்படுத்த முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30-70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 |
| தக்காளி | 40 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 50 |
| கோவா | 80 | 50 | 60 |
| கரட் | 100 | 60 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 140 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 100 |
| லீக்ஸ் | 120 | 80 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 60 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 120 |
| போஞ்சி | 140 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 25-40 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 110 | 100 | 120 |

## பேருந்து சேவை திகதி மாற்றம்

பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கு மின்னேரியா, மாதுறு ஓயா, சாலியபுரவில் நடைபெறும் தலைமைத்துவ பயிற்சிக்கு செல்வதற்கான மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவிசேட பேருந்துசேவைநாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் மாணவர்களின் வருகைக்கு ஏற்ப யாழ்.பிராந்திய பேருந்து நிலையத்திலிருந்து மின்னேரியா, மாதுறு ஓயா, சாலிய புர வரை சேவையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினமும் நேற்றும் தொலைபேசியில் யாழ்.சாலை முகாமையாளரை தொடர்புகொண்ட மாணவர்கள் தமக்கு பயிற்சி எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிப்பதாகவும் எனவே விசேட பேருந்து சேவையினை நாளை மறுதினம் சனிக்கிழமை மாற்று ஒழுங்கு செய்து தருமாறும் கேட்டதற்கு இணங்க வீதி முகாமையாளர் தலைமைத்துவ பயிற்சி மத்திய நிலையத்திற்கான பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது பயிற்சிகள் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் என்றும் மாணவர்கள் 4ஆம் திகதி வருகை தரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து மின்னேரியா மாதுறு ஓயா, சாலியாபுர செல்லும் விஷேட பேருந்து சேவைகள் அனைத்தும் நாளைமறுதினம்சனிக்கிழமைகாலை 6.30 மணி தொடக்கம் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து குறித்த பயிற்சி நிலையங்களுள் சேவையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபை யின் யாழ்.சாலை முகாமையாளர் செ. குலபாலசிங்கம்அறிவித்துள்ளார்.(இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 153

அற்புதராஜ் முகேஸ்ராம்





கிரி சிவராஜ்





விபோசன்





தர்சன் தர்சு




மேகலா ஜெசி




ரோஜா சிவா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொத்துக் குவிப்பு

## மன்னிக்க முடியாத குற்றம்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட தீர்ப்பின் "ஆபரேட்டிவ் போர்ஷன்' என்று சொல்லப்படும் தீர்ப்பின் சாராம்சத்தை நீதிபதி குன்ஹா இப்படித் தான் தொடங்கினார்...

"66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கில் ஐம்பத்துமூன்று (53,60,49,954 ரூபாய்) கோடி ரூபாய் வருமானம் முறைகேடான வழிகளில் சம்பாதிக்கப்பட்டுள்ளது என்பது இந்த வழக்கில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகி உள்ளது. இந்த வழக்கின் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு உள்ளவர், பொது ஊழியராகப் பொறுப்பில் இருந்த காலத்தில், இந்தக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளார். வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகி உள்ளது. அவருடைய இந்தச் செயல் ஊழல் தடுப்புச்சட்டம் 13 IE-ன் படி தண்டனைக்குரிய குற்றம். முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர், இரண்டாவது (சசிகலா), மூன்றாவது ( சுதாகரன்), நான்காவது (இளவரசி) குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களுடன் சேர்ந்து கூட்டுச்சதியில் ஈடுபட்டு குற்றம் புரிந்துள்ளதும் நிரூபணமாகி உள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 120 B-ன் படி "கூட்டுச் சதி (criminal conspiracy)' செய்தல் குற்றமாகும்.

இந்த வழக்கில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டு உள்ளவர்கள், முதல குற்றவாளி செய்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்துள்ளனர். இந்தியத் தண்டனைச் சட்டம் 109-ன் படி "குற்றத்துக்கு உடந்தை (aiding and abet)' என்பதும் குற்றமாகிறது. எனவே, நான்கு பேரும் குற்றவாளிகள் என்று இந்த நீதிமன்றம் அறிவிக்கிறது. ஒவ்வொருவருக்குமான தண்டனை விபரங்களைப் பின்னர் அறிவிக்கிறேன். நீங்கள் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம். "நீதிபதி ஜான மைக்கேல் டி. குன்ஹா இப்படி வாசித்து முடித்ததும ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரோடு அவர்களுடைய வழக்கறிஞர்களின் முகமும் இருண்டு போனது. அப்போது நேரம் 11.30 மணி!

அப்போதே ஜெயலலிதாவின் காரில் இருந்த தேசியக் கொடி அகற்றப்பட்டது. அந்த ஒரு நிகழ்வே நீதிமன்ற அறைக்கு வெளியில் நின்றுகொண்டிருந்த அ.தி.மு.க-வைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ-க்களுக்கு நிலைமையை உணர்த்திவிட்டது. அனைவரும் சோகத்தில் மரத்தடியில் அமர்ந்துவிட்டனர்.

### மீண்டும் வாதங்கள்!

மாலையில் நீதிபதி குன்ஹா தண்டனை விபரத்தை வாசித்தார். "குற்றவாளிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்குத் தண்டனையாக ஒவ்வொருவருக்கும் தலா நான்கு வருடங்கள் சிறைத் தண்டனை அளிக்கிறேன். அதுபோல, முதல் குற்றவாளிக்கு அபராதத் தொகையாக 100 கோடி ரூபாய் விதிக்கிறேன். வழக்குத் தொடரப்பட்டபோது வழக்கில் தவறான வழிகளில் சேர்க்கப்பட்டு நீதிமன்றத்தோடு இணைக்கப்பட்ட சொத்து மதிப்பு 66 கோடி ரூபாய். அது அரசாங்க மதிப்பீட்டின்படி கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது அதன மதிப்பு 5 மடங்காக அதிகரித்துள்ளது. எனவே, அபராதத் தொகை அதற்கேற்றவாறு கணக்கிடப்பட்டு நூறு கோடி ரூபாய என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் குற்றவாளி, இந்த அபராதத்தைக் கட்டாத நிலையில் கூடுதலாக ஒரு வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். அதுபோல, ஏனைய குற்றவாளிகள் தங்களது அபராதத்தைச் செலுத்தத் தவறினால் கூடுதலாக ஆறுமாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்" என்று முடித்தார்.

"பல இலட்சம் கோடி ரூபாய் ஊழல்களை மிகச் சாதாரணமாகச் சாதித்துவிடும் எந்த அரசியல்வாதிக்கும் இதுவரை 100 கோடி ரூபாய் அபராதம்' என்று விதிக்கப்பட்டது இல்லை. இத்தனை பெரிய தொகையை அபராதமாகச் செலுத்த அறிவுறுத்தப்பட்ட முதல் அரசியல்வாதி, முதல் முதலமைச்சர் ஜெயலலிதாதான்.

100 கோடி ரூபாய் அபராதம் என்பது தனியானது. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஏனென்றால், பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகள் அனைத்தும் அரசாங்கத்தினுடையவை. ஒருவர் முதலமைச்சராக இருக்கும்போது அவரு [illegible] கப்படும் அன்பளிப்புகள் மற்றும் வருவாய்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கருவூலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பது விதிமுறை அதன்படி ஜெயலலிதாவின் வருமானத்துக்கு அதிகமாக சேர்க்கப்பட்டு இருந்த சொத்துகள் அனைத்தும் அரசாங்கக் கருவூலத்தில் சேர்க்கப்படும். அது தவிர்த்து, தனியாக 100 கோடி ரூபாயை அபராதமாக ஜெயலலிதா கட்ட வேண்டும்.

அதுவும் முறையான கணக்கு வழக்கு காட்டப்பட்ட பணத்தில் கட்ட வேண்டும் அந்த அபராதத்தைச் செலுத்தி அதற்கான ரசீதை நீதி மன்றத்தில் சமர்ப்பித்தால் மட்டுமே அவர் மேன்முறையீட்டுக்கோ அல்லது பிணை கேட்டோ விண்ணப்பிக்க முடியும்" என்று நீதித்துறை வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

### மேன்முறையீடும் [illegible]!

இந்த வழக்கில் மேன்முறையீடும் ஜாமீனும் தனித்தனி யாகக் கிடையாது. மேன்முறையீடு செய்யும்போது, "நான் இந்த வழக்கில் மேன்முறையீடு செய்கிறேன். எனக்கு ஜாமீனும் வழங்க வேண்டும்' என்று மனுச்செய்ய வேண்டும். ஆனால், தீர்ப்பின் நகல் இவர்கள் கையில் கிடைககும் வரை அவர்கள் மேன்முறையீடு செய்ய முடியாது. மேலும் மேன்முறையீடு செய்யும் போது அவர்கள் அபராதத் தொகையைச் செலுத்தி அதற்கான ரசீதை இணைத்திருக்க வேண்டும். அப்போது தான் அந்த மனு விசாரணைக்கே ஏற்றுக் கொளளப்படும். இந்தத் தொகை அதிகம் என்றும் கட்டுவதில் சிரமம் என்றும் சொனனால், அதற்காகத் தனியாக கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அதில், தீர்ப்பு வருமவரை சொத்துக் குவிப்பு வழக்கில் மேன்முறையீடுக்கும் ஜாமீனுக்கும் விணணப்பிக்க முடியாது.

### வழக்குச் செலவை யார் கொடுப்பது?

சொத்துக் குவிப்பு வழககை தமிழகத்தில் இருந்து பெங்களூருக்கு மாற்றியது முதல், அந்த வழக்கை நடத்த இதுவரை 5 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. அந்தச் செலவை கர்நாடக அரசுக்கு தமிழக அரசு கொடுக்க வேண்டும். அந்தத் தொகையை தமிழக அரசு கட்டத் தவறினால் ஜெயலலிதா 1991 இற்கு முன்பாக தனக்கு இருந்ததாகக் காட்டியுள்ள சொத்துகளை விற்று அந்த ஐந்து கோடியைக கட்ட வேண்டும்.

### போயஸ் கார்டன்!

போயஸ் கார்டன் வீட்டுக்கு ஏதாவது பிரச்சினை வருமா? என்ற சந்தேகம் கிளப்பப்படு கிறது. "அந்த வீடு ஜெயலலிதா முதன் முறையாக முதலமைச்சராவதற்கு முன்பாகக் கடடப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு அவர் அந்த வீட்டில் கூடுதலாகக் கட்டப்பட்ட பகுதிகள், செய்யப்பட்ட ஆடம்பர வேலைப்பாடுகள், அலங்காரப் பொருட்கள் அரசுடைமையாகும்"

### பொலிஸாரிடம் ஜெயலலிதாவின் கார்!

ஜெயலலிதாவுக்கு பரப்பன அக்ரஹாரா சிறையில் மருத்துவர்கள் உடல் நிலையை பரிசோதித்தனர். அப்போது அவருக்கு இரத்த அழுத்தம் சீரற்ற நிலையில் இருந்தது. அதற்கான சிகிச்சை அளித்தனர். அரை மணி நேரத்தில் இரத்த அழுத்தம் சீரானது. அதன்பின்னர், நான்கு பேரையும் சிறைக்கு அனுப்ப நீதிபதி குன்ஹா உத்தரவு பிறப்பித்தார். சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சிறைக்கு அனுப்பபட்டனர். ஆனால், ஜெயலலிதாவுக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு இருப்பதால, அவரை அவர்கள் பொறுப்பில் இருந்து தங்கள் கஸ்டடியில் எடுப்பதற்குள் கர்நாடக மாநில காவலர்களுக்குப் பெரும்பாடாகிவிட்டது. இசட் பிளஸ் பாதுகாப்பில் உள்ள தேசிய பாதுகாப்புப்படையினர், "எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுததால்தான் நாங்கள் அவரை அனுப்புவோம்' என்றனர். இதில் டென்ஷனான கர்நாடக மாநில பொலிஸார், "நீதிமன்ற உத்தரவைக் கேட்டீர்கள் அல்லவா? மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி அவர் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டவுடன் அவர் பதவி உட்பட அவருக்குரிய சலுகைகள் அனைத்தையும் இழந்தவராகிறார். நாங்கள் எழுத்துபூர்வமாக கொடுப்பதற்கு எந்த அவசியமும் இல்லை' என்றனர். அதன்பிறகு ஜெயலலிதாவை கர்நாடக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அதன் பின்னர், ஜெயலலிதாவின் காரில் அவரை அழைத்துச் சென்று பரப்பன அக்ரஹாரா சிறையில், எண் 7402 அறைக்கு அழைத்துச் சென்றனர். அப்போது மணி சரியாக இரவு 8.20.

ஜூனியர் விகடன்

### நீதிபதி குன்ஹா

ஜெயலலிதா




சசிகலா



இளவரசி



சுதாகரன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

940

## சுட்டி மனசு



நான் ஜாலியா சிரிச்சுப் பேசினா ... இன்னும் என்ன சின்னக்குழந்தைனு நினைப்பா?னு அம்மா திட்டுறாங்க. நான் கோலம் போடுறேம்மானா பெரிய மனுஷி மாதிரி எல்லாம் செய்ய ஆசைப்படாதே. ஒழுங்கா சின்னப் புள்ளை மாதிரி இரு?னு சொல்றாங்க. நான் எப்பவும் சின்னனப் புள்ளையாத்தான் இருக்கனுமா?







எங்களுக்கு வீட்ல எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனா, எங்களைப் பார்த்தும் உங்க ரெண்டுபேர்ல யாரு மக்கு? உங்க அம்மா அப்பாவுக்கு யாரை ரொம்ப பிடிக்கும்?னு கேட்கிறாங்க. ஏன் இப்படி கேட்கனும்? மனசுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு. நாங்க முதல் ரேங்க் வாங்குற பொண்ணுங்க. இதுபோல இனி யாரையும் மனம் நோகடிக்காமல் இருந்தாங்கன்னா நல்லா இருக்கும்!



எனக்கு விதவிதமான ஓவியங்கள் வரையப் பிடிக்கும். ஆனா அதுக்கான சூழல் இல்லை. தனியா ஒரு றூம் இருந்தா நல்லா இருக்கும். பேரன்ஸ்கிட்ட சொன்னா நீயே சம்பாதிச்சு சொந்தமா வீடு கட்டிக்கோனு சொல்றாங்க எப்போ நான் வீடு கட்டுறது.... எப்போ படம் வரையிறது?



எனக்கு உடம்பு சரியில்லைனாக்கூட மாத்திரை சாப்பிட பிடிக்காது. ஆனா எங்க அம்மா தினமும் சத்து மாத்திரை சாப்பிடச் சொல்றாங்க. மாத்திரையை நெனைச்சாலே பயமா இருக்கு!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2014
02

- கி.மு 44 - எகிப்தின் பாரோ ஏழாம் கிளியோபத்ரா தனது மகன் சிசேரியனை அரசனாக்கினாள்.
- கி.மு 31 - கிரேக்கத்தின் மேற்குக் கரையில் ஒக்டேவியனின் படைகள் மார்க் அந்தோனி, மற்றும் கிளியோபத்ராவின் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1642 - இங்கிலாந்து நாடாளுமன்றம் லண்டன் நாடக அரங்குகள் அனைத்தையும் மூடிவிட உத்தரவிடட்டது.
- 1666 - லண்டன் பெரும் தீ: லண்டனில் இடம்பெற்ற பெருந்தீயினால் மூன்று நாட்களில் புனித போல் தேவாலயம் உட்பட 10,000 கட்டடங்கள் அழிந்தன.
- 1752 - கிரெகொரியின் நாட்காட்டி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளின் பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் அறிமுகப படுத்தப்பட்டது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் அட்லாண்டாவை விட்டு விலகிய அடுத்தநாள அமெரிக்கப் படைகள் அங்கு போய்ச் சேர்ந்தன.
- 1870 - பிரான்சில் செடான் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ரஷ்யப் படையினர் பிரான்சின் மன்னனான மூன்றாம் நெப்போலியனையும் அவனது படையினர் 100,000 பேரையும் கைது செய்தனர.
- 1885 - வயோமிங் மாநிலத்தில் 150 வெள்ளையின சுரங்கத் தொழிலாளர்கள் வெளிநாட்டு சீனத் தொழிலாளர்களைத் தாக்கி அவர்களில் 28 பேரைக் கொன்று 15 பேரைக் காயப்படுத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் நகரை விட்டுத் தப்பியோடினர்.
- 1898 - பிரித்தானிய மற்றும் எகிப்தியப் படைகள் சூடானிய பழங்குடியினரைத் தாக்கி அந்நாட்டில் பிரித்தானிய மேலாண்மையை ஏற்படுத்தினர்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: போலந்து மீதான முற்றுகையை அடுத்து கதான்ஸ்க் நகரம் நாசி ஜேர்மனியினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பசுபிக் போர் முடிவுக்கு வந்தது. ஜப்பானின் கடைசி அதிகாரபூர்வமான சரணடைதல் டோக்கியோ வளைகுடாவில் "மிசூரி" என்ற அமெரிக்கக் கப்பலில் நிகழ்ந்தது.
- 1945 - வியட்நாம், பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்து, வியட்நாம் மக்களாட்சிக் குடியரசு என்ற பெயரில் (வடக்கு வியட்நாம்) ஹோ சி மின் தலைமையில் ஆட்சியை அமைத்தது.
- 1946 - பிரித்தானிய இந்தியாவில் ஜகர்லால் நேரு தலைமையில் பிரதமரின் அதிகாரங்களுடன் இடைக்கால அரசு உருவானது.
- 1951 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.
- 1958 - அமெரிக்காவின் விமானப்படை விமானம் ஒன்று சோவியத் ஆர்மீனியாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1965 - பாகிஸ்தான் படையினர் இந்தியாவின் காஷ்மீருக்குள் நுழைந்தனர்.
- 1967 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தன்னியக்கப் பணம் வழங்கி நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது.
- 1970 - சந்திரனுக்கான அப்பல்லோ 15 விண்கப்பலின் திட்டம் கைவிடப்பட்டதாக நாசா அறிவித்தது.
- 1996 - பிலிப்பீன்ஸ் அரசுக்கும் மோரோ தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### பிறப்புகள்

- 1866-சாள்ஸ் வின்சன்ட், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்டாளர் (இ. 1943)
- 1913 - ஸ்ரேல் கெல்ஃபாண்ட், ரஷ்ய கணிதவியலர் (இ. 2009)
- 1952-ஜிம்மி கான்னர்ஸ், அமெரிக்க டென்னிஸ் ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1969 - ஹோ சி மின், வியட்நாம் தலைவர் (பி. 1890)
- 1973 - ஜே. ஆர். ஆர். டோல்கீன், பிரித்தானிய எழுத்தாளர் (பி. 1892)
- 1996 - பேடி கிளிஃப்ட், ஜிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் (பி. 1953)
- 2009 - ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர (பி. 1949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்


## சபாஷ் சரியான போட்டி!



...பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் ஆஸ்திரேலியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று முந்தைய இரண்டு டெஸ்ட்களில் பெற்ற புண்களை ஆற்றிக்கொண்டது. சச்சின் இந்த டெஸ்டில் எடுத்தது 177 ரன்கள். ஆக, மூன்று டெஸ்ட் போட்டிகளில் இந்தியா இரண்டிலும் ஆஸ்திரேலியா ஒன்றிலும் வெற்றிபெற, தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் வென்றது. 1996 இல் பார்டர்-கவாஸ்கர் கோப்பையை வென்ற இந்திய அணி மீண்டும் அதை தக்கவைத்துக்கொண்டது.

வெளியே இருக்கும்போது முதலை பலவீனமாகக் காணப்படலாம். ஆனால், தண்ணீரில் இருக்கும்போது அதை வீழ்த்துவது என்பது கனவில்கூட நினைக்க முடியாத ஒன்று. அதுபோல் இந்திய அணி சொந்த மண்ணில் விளையாடும்போது பலமாக இருக்கிறது என்று வார்னே தனது சுயசரிதையில் இந்திய அணி மற்றும் சச்சின் பேட்டிங் பற்றி எழுதியுள்ளார்.

வெளியே இருக்கும்போது முதலை பலவீனமாகக் காணப்படலாம். ஆனால், தண்ணீரில் இருக்கும்போது அதை வீழ்த்துவது என்பது கனவில்கூட நினைக்கமுடியாதஒன்று. அதுபோல் இந்திய அணி சொந்த மண்ணில் விளையாடும்போது பலமாக இருக்கிறது



இதனைத் தொடர்ந்து இந்தியா, ஆஸ்ரேலியா மற்றும் ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு பெப்சி ஒருநாள் போட்டிகள் ஆரம்பமாயின. இந்தியா தான் விளையாடிய அனைத்து லீக் போட்டிகளிலும் ஆஸ்திரேலியா மற்றும் ஜிம்பாப்வே அணிகளை வென்றது. ஒரு செஞ்சுரி மற்றும் ஐந்து விக்கெட்டுக்கள் என ஆல்ரவுண்ட்ராகவே சச்சின் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார். ஐந்து விக்கெட் எடுத்தது ஆச்சரியமான விடயம். என்னால், நம்பவே முடியவில்லை என்கிறார் சச்சின். லீக் போட்டியில் தோற்காத இந்தியாவும் இரண்டில் வென்று இரண்டில் தோற்ற ஆஸ்திரேலியாவும் இறுதிப் போட்டிக்காக டெல்லியில் மோதின. மரதன் ஓட்டப் பந்தயத்தில் வெற்றியின் விளிம்பு வரை வேகமாக ஓடிவரும் வீரன் வெற்றிக் கோட்டைத் தொடுவதற்கு முன்பு தடுக்கி விழுவதுபோல் அனைத்து லீக் போட்டிகளிலும் வென்ற இந்தியா இறுதிப் போட்டியில் படுதோல்வி அடைந்தது. ஆக, பெப்சி கோப்பையை ஆஸ்திரேலியா தட்டிச் சென்றது.

பெப்சி கோப்பை போட்டிகளைத் தொடர்ந்து ஷார்ஜாவில் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான கோக்க கோலா முத்தரப்புப் போட்டிகள் ஆரம்பமாயின. நியூசிலாந்துடனான முதல் போட்டியில் இந்தியா 15 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அடுத்த போட்டியில் நியூசிலாந்து மீண்டும் ஆஸ்திரேலியாவிடம் தோற்க முதல் லீக் போட்டியில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மோதின. சச்சின் 80 ரன்கள் எடுத்தும் பலன் இன்றி ஆஸ்திரேலியா 58 ரன்கள் அதிகம் எடுத்து வெற்றி பெற்றனர். நியூசிலாந்துடனான அடுத்த போட்டியில் இந்திய அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. அடுத்த கட்டப்போட்டியில் ஆஸ்திரேலியா எளிதாக நியூசிலாந்தை வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. அடுத்த போட்டி இந்தியா இறுதிப்போட்டிக்கு செல்லுமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் போட்டி, ஆஸ்திரேலியா உடனான தகுதி பெறும் போட்டியில் ஜெயிக்க வேண்டும் அல்லது நியூசிலாந்து எடுத்த ரன் சதவிகிதத்தை விட அதிகமாக எடுக்க வேண்டும்.

(தொடரும்)

**கே. ரமேஷ்**

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

**ஆன்மீகம் 32**

...சரியாக உங்கள் மனைவி அவளுக்குப் பிடித்தமான ஒரு தொலைக்காட்சித் தொடரைப்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது உங்களுக்குப் பசியெடுக்கும். அவள் உங்களுக்கு உணவு பரிமாற வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள். நேரம் காலம் தெரியாமல் தொடர்களைக் காண்பிப்பதற்காக தொலைக்காட்சியை சபிப்பீர்கள்! பின் எல்லா வீடுகளிலும் நடக்கும் வழக்கமான வாக்குவாதங்கள் மீண்டும் ஒருமுறை நிகழும்.

ஒரு சின்னக் கதை...

ஒருவர் தன் மனைவியுடன் ஒரு உணவு விடுதியில் அமர்ந்திருந்தார். அவர்கள் உணவிற்கு ஆர்டர் கொடுத்துவிட்டு காத்திருந்தனர். மனைவி குறைகூறினாள். அன்பே, நாம் இந்த உணவு விடுதியில் நுழைந்ததிலிருந்து நீங்கள் ஒரே செய்தித்தாளையே படித்துக் கொண்டு இருக்கிறீர்கள். நான் வருந்துகிறேன் அன்பே என்று மன்னிப்புக் கேட்ட கணவர் வெயிட்டரிடம் சைகைக் காட்டி தயவுசெய்து இன்னொரு செய்தித்தாள் கிடைக்குமா என்று கேட்டார்.

(சிரிப்பு)

பாருங்கள்; நாம்; அனைவரும் எப்பொழுதும் கவனத்திற்காக ஏங்குகிறோம். நமக்கு அது கிடைக்காத பொழுது துயரம் அடைகிறோம். நம் வாழ்க்கையில் எல்லா கோபங்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் தோல்வி மனப்பான்மைக்கும் மூல காரணம் இதுவே.

நாம் கேட்பதை நிறுத்திவிட்டு கொடுக்கத் தொடங்க வேண்டும். நாம் சக்தியைக் கேட்பதற்கு பதிலாக சக்தியைப் பரப்ப வேண்டும். ஆனால், நமக்கு கவனத்தை [illegible] மற்றவரை நோக்கித் திருப்புவது என்பது தெரியாது. நாம் நம்மையே கவனமையமாகப் பார்க்கப் பழகிவிட்டோம். வெளியுலகத்தைக் கவனமையமாகப் பார்க்கத் தொடங்க வேண்டும். இதை எவ்வாறு செய்வது?

அடுத்த சில நாட்களுக்கு நீங்கள் [illegible] அனைவரும் இந்த சின்னப் பயிற்சியைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களிடமிருந்து, அதே பாலினத்தில், ஒரு கூட்டாளியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். அந்தக் கூட்டாளியை முழுவதுமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். எப்பொழுதும் உங்கள் முதல் எண்ணம் அவருடைய வசதியைப் பற்றித்தான் இருக்க வேண்டும். எப்பொழுதும் நீங்கள், உங்கள் கூட்டாளி மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேறு ஏதேனும் தேவையா என்று தெரிந்துகொள்ளுங்கள். முதலில் உங்களுக்கான உணவுத் தட்டை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக தட்டை அவரிடம் கொடுத்துவிட்டுப் பிறகு நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் அறையில் சூடான தண்ணீர் வரவில்லை என்றால் அவர்கள் அறையில அவர்களுக்கு சூடான தண்ணீர் இருக்கிறதா என்று பாருங்கள்.

நீங்கள் உங்கள் நண்பர்களையோ அல்லது உறவினர்களையோ கூட்டாளியாக சேர்த்துக் கொள்வதை நான் விரும்பவில்லை!

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலும் எபோலா வைரஸ்!

அமெரிக்காவிலும் எபோலா வைரஸின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நபரொருவர் அடையாளம் காணப்பட டுள்ளதாக அமெரிக்க அரசாங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

எபோலா தாக்கத்திற்குள்ளானவர் என சந்தேகிக் கப்படும் இவர் அண்மையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் மேற்கு ஆபிரிக்காவிற்கு பயணம் மேற் கொண்டு அமெரிக்காவுக்கு திரும்பியுள்ளார்.

இந்நபர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமை ந்துள்ள பிரிஸ்பைடீரியன் வைத்தியசாலையில் தனியே ஒரு பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்கு உள் ளாக்கப்பட்டு வருகிறார். பாதிக்கப்பட்டவர் எந்த நாட்டுக்குரியவர் என்பதோ எந்த வயதினையொத்தவர் என்பதோ இதுவரை யில் மருத்துவ சமூகத்தினரால் வெளிப்படுத்த படவில்லை.

ரெக்ஸாஸ் மாநிலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இந்நபரின் மூலம் இவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எபோலா தொற்றி யிருக்க சந்தர்ப்பம் இருப்பதாகவும் அதனால் அனைவரும் சோதனைக்குட்படுத்தப்படுவது நன்மையெனவும் அமெரி க்க சுகாதார சேவை செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# மேற்கு ஆபிரிக்காவில் எபோலா நோயினால் 3700 குழந்தைகள் அநாதைகளாகியுள்ளனர்

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் கடந்த பெப்ரவரி மாதம் பரவத் தொடங்கிய எபோலா என்னும் விஷத் தொற்றுநோய் அண்டை நாடு களான லைபீரியா, சியரா லியோன், நைஜீரியா, செனெ கல் ஆகிய நாடுகளிலும் பர வியதில் இதுவரை மூவாயி ரத்துக்கும் மேற்பட்டோர் பலி யாகியுள்ளனர்.

இதன் விளைவாகத் தங் களுடைய தாய் அல்லது தந் தையை இழந்த நிலையிலோ அல்லது இரண்டு பேரையும் இழந்து தனித்து விடப்பட் டுள்ள நிலையிலுள்ள குழந் தைகளின் எண்ணிக்கை குறைந்தது 3 ஆயிரத்து 700 ஆக இருக்கும் என்று ஐ.நா. குழந்தைகள் அமைப்பு தெரி வித்துள்ளது.

இந்த நோயினால் மிக வும் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ள கினியா, லைபீரியா மற்றும் சியரா லியோன் நாடு களில் இரண்டு வாரங்களு க்கும் மேலாக எடுக்கப்பட்ட கணிப்பீடுகளின் முடிவுகளே இவை என்று கூறப்படுகின் றன. இந்த நாடுகளிலும் லைபீரியாவே மிகவும் மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோர்கள் இறந்ததி னால் புறக்கணிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு பராமரிப்பு கிடைப்பது என்பது மிகவும் கடினமாக உள்ளதாக யுனிசெப அமைப்பு தெரிவிக்கின்றது.

இக்குழந்தைகளின் உற வினர்கள், தங்களின் பெற் றோர்கள் இறந்துபோன வைத் தியசாலைகளிலேயே அநா தைகளாகக் காணப்படுகின் றனர். அல்லது சிலசமயம் உற வினர்களால் உணவு அளிக் கப்படுகின்றது என்று குறிப்பி டும் இந்த அமைப்பு இது தவிர மற்ற எந்தத் தொடர்பையும் இந்தக் குழந்தைகளுடன் மற் றவர்கள் ஏற்படுத்திக் கொள் ளுவதில்லை என்று தெரிவித் துள்ளது.

மூன்று, நான்கு வயது டைய குழந் தைகள் கூட இவ் வாறு காணப்படுவதாக யுனி செப் கூறுகின்றது. சியரா லியோ னில் அடுத்த மாதம் இதற் கான ஒரு கூட்டத்தைக் கூட்ட ஐ.நா. அமைப்பு திட்ட மிட்டுள்ளது.

ஆனால் அதற்கு முன் னர் இத்தகைய குழந்தை களுக்குத் தகுதியான பாதுகா ப்பாளர்கள் கிடைக்க வேண் டும் என்று யுனிசெப் எதிர்பார் க்கின்றது. (இ)




## ஹஜ் பயணம் மனித சக்தியை வீணடிக்கிறது

### பங்களாதேஷ் அமைச்சர் பதவியை இழந்தார்

பங்களாதேஷத்தில் தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்தவர் அப்துல் லத்தீப் சித்திக். இவர் ஹஜ் பயணம் செல்லும் முஸ் லிம்களை விமர்சனம் செய்தி ருந்தார்.

நான் ஹஜ் மற்றும் தலி பிக் ஜமாத்துக்கும் முற்றிலும் எதிரானவன். 20 இலட்சம்பேர் சவுதி அரேபியாவுக்கு ஹஜ் யாத்திரை செல்கின்றனர்.

ஹஜ் பயணம் மனித சக் தியை வீணடிக்கிறது. அத னால் அதிக பணம் செல வழிகிறது. பொருளாதாரமும் பாதிக்கிறது என கூறியிருந் தார். அவரது இந்த கருத்துக்கு பங்களாதேஷத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

போராட்டமும் நடத்தப் பட்டது. நிலைமை மோசம டைந்ததை தொடர்ந்து அவரை பிரதமர் ஷேக் ஹசீனா பதவி நீக்கம் செய்தார். (இ)

# பக்தாத்தில் தொடர்கின்றது தீவிரவாதிகளின் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கில் சன்னி பிரிவை சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் கைப்பற்றிய இஸ் லாமிய தேசம் பகுதியில் அமெரிக்க இராணுவம் கட ந்த மாதம் முதல் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

அதற்கு பழி தீர்க்கும் வகையில் மைனாரிட்டி ஆன ஷியா பிரிவினர் வாழும் பகு திகளில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியு ள்ளனர்.




பக்தாத் அருகே ஷியா பிரிவினர் பெருமளவில் உள் ளனர். நேற்று முன்தினம் அங்கு பல இடங்களில் கொடூர தாக்குதல்களை நடத்தினர்.

ஹொரீயா மாவட்டத்தில் 2 கார் குண்டுகள் வெடித் தன. அதில் 20 பேர் பலியா கினர். 35 பேர் காயம் அடை ந்தனர்.

மேலும் இதற்கு அடுத் தாற்போல் உள்ள சப் அல் போர் நகரில் கையெறி குண் டுகள் வீசியதில் 5 பேர் உயி ரிழந்தனர். 15 பேர் காயம் அடைந்தனர்.

தென்மேற்கு பக்தாத்தில் உள்ள ஷா பரானியா மாவட் டத்தில் கார் குண்டு வெடித் தது. அதில் 7 பேர் கொல்லப் பட்டனர். 18 பேர் காயம் அடைந்தனர். அல்-ஷுலா மாவட்டத்தில் குண்டுகள் வெடித்தன. அதில் 3 பேர் பலி யாகினர். 12 பேர் காயம் அடைந்தனர்.

இந்த தாக்குதல்களில் மொத்தம் 35 பேர் பலியாகி யுள்ளனர். 80 பேர் காயம் அடைந்தனர். இவை தவிர ஈராக்கில் ஷியா பிரிவினர் வாழும் பகுதிகளில் ஆங்கா ங்கே தாக்குதல்கள் நடை பெற்றன. இச்சம்பவங்களிலும் பலர் உயிரிழந்துள்ளனர். (இ)

# ஆர்ஜென்டீனா நீதிமன்றம் அவமதிப்பை செய்துள்ளது

## அமெரிக்க நீதிபதி தீர்ப்பு

பொருளாதார நிதி நெருக் கடி காரணமாக ஆர்ஜென்டீனா வெளி முதலீட்டாளர்களிடமி ருந்து வாங்கியிருந்த 100 பில்லியன் டொலர் கடனை கட ந்த 2001 ஆம் ஆண்டில் திரு ப்பி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அதன் பங்குதாரர்களுக்கு குறிப் பிட்ட அளவு பணத்தைத் திரு ப்பிக்கொடுப்பதாக ஒரு உட ன்பாட்டினை அந்த நாடு எட் டியது. குறைந்த மதிப்பு பத் திர பரிமாற்றங்களை சில முதலீட்டாளர்கள் ஏற்றுக் கொண்டபோதும் அவர்களு க்கு வட்டி ஏதும் வழங்கப்பட வில்லை.


ஆனால், அமெரிக்கா வைச் சேர்ந்த என்எம்எல் கேபிடல் மற்றும் அரேலியஸ் கேபிடல் நிர்வாகம் என்ற இரு நிதி நிறுவனங்கள் தாங்கள் அளித்த 1.5 பில்லியன் டொலர் தொகையையும் முழுவது மாகத் திருப்பி அளிக்கும்படி வலியுறுத்தின. அதுபோல் உடன்படிக்கை மூலம் சீர மைக்கப்பட்ட பத்திரங்களு க்கு மட்டும் ஆர்ஜென்டீனா பணம் செலுத்துவதாக இருந் ததையும் வழக்கு தொடுத்தன் மூலம் தடுத்து நிறுத்தின.

இந்த வழக்கின் மூலம் சர்ச்சையில் சிக்கிய ஆர்ஜென டீனாவின் செயற்பாடு குறி த்து ஜூலை மாதம் நடத்தப் பட்ட விசாரணை முடிவில் இந்த நிதி நிறுவனங்களின் பாக்கியை ஆர்ஜென்டீனா செலுத்த வேண்டும் என்று நீதிபதி தாமஸ் கிரீசா தீர்ப்பு வெளியிட்டார். ஆனால் இதனை ஏற்க ஆர்ஜென்டீனா மறுத்து விட்டது. மேலும் நேற்று முன் தினம் அமெரிக்காவிற்கான ஆர்ஜென்டீனா தூதுவர் அமெரி க்க வெளியுறவுத்துறை அமை ச்சர் ஜோன்கெர்ரிக்கு கடிதம்ஒன றையும் அனுப்பியிருந்தார்.

அதில் தங்கள் நாட்டின் மீது நீதிமன்ற அவமதிப்பு தீர் ப்பு வழங்கப்படுமேயானால் அது அந்நாட்டு உள்துறை விவகாரங்களில் அமெரிக்கா சட்டவிரோதக் குறுக்கீடு களை மேற்கொண்டதாக எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஆனால்நேற்று முன்தினம வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் நீதிமன்றம் குறிப்பிட்டபடி ஆர் ஜென்டீனா, நிதி நிறுவனங் களுக்கு பணத்தை திருப்பித் தராததால் இது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படுகின் றது என்றே நீதிபதி கிரீசா குறி ப்பிட்டுள்ளார். மேலும் இது குறித்த அபராதத்தை பின்னா அறிவிப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (இ)

## முகமெங்கும் துளை, வாயை கிழிக்கும் இராட்சத கத்திகள்



தாய்லாந்து நாட்டில் நடை பெற்ற திருவிழா ஒன்றில் மக்கள் தங்களது கன்னாங்க ளிலும், முகத்திலும் துளை யிட்டு விநோதமாக கொண் டாடியது அனைவரையும் அதி ர்ச்சியில்உறைய வைத்துள்ளது.

தாய்லாந்தின் புக்கெட் (Phuket) நகரில் வசிக்கும் சீன மக்கள் வெஜிடேரியன் திருவிழாவை (Vegetarian Festival) கொண்டாட தங்க ளது கன்னாங்களில் கூர்மை யான ஆயுதங்களால் துளை யிட்டு கொண்டுள்ளனர்.


9 ஆவது சந்திர மாதத்தல் நடக்கும் இத்திருவிழாவில் பங்கேற்க ஆண்டுதோறும்ஆயி ரக்கணக்கான மக்கள் திரண்டு வருகின்றனர்.

விழாவில் பங்கேற்பவர்கள் மாமிசம், மது உட்கொள்வதை தவிர்ப்பது மட்டுமின்றி கெட்ட பழங்கங்களில, ஈடுபடுவதை முழுமையாக தவிர்க்க வேண்டும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சி; பண்பாட்டு தளத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

## ஓர் அறிவியல் சிந்தனை



பண்பாடு என்ற சொல்லினை நாம் நோக்கின் அது மனிதரோடு தொடர்புடைய ஒன்றாக காணப்படுவதுடன் மானிடவியல் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக மட்டுமல்லாது மெய்யியல், உளவியல் என பல தரப்பட்ட துறைகளிலும் முக்கியத்துவம் கொடுத்து பேசப்படுகின்ற ஒன்றாக காணப்படுகிறது. பண்பாடு என்றால் என்ன என்பதை நோக்கின் அதற்கு ஒரு தெளிவான வரையறை கூறுவது கடினம். ஏனெனில் இது மனிதர்களுடையவாழ்க்கைமுறையினை சார்ந்த ஒன்றாக உள்ளமையினால் பல்வேறு தரப்பட்டவர்கள் பல்வேறு நிலைகளில் நின்று பண்பாட்டிற்கு வரையறை கொடுக்கின்றனர். இது தொடர்பான சிறப்பான ஒரு வரையறையை புகழ் பெற்ற மானிடவியலாளரான எட்லர்ட் பர்ணட் டைலர் என்பவர் தந்துள்ளார். இவர் பண்பாடு என்றால், ஒரு சமுதாயத்தின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலியன சம்பந்தப்பட்டவகையில் மனிதன் அதன் அங்கமாக இருந்து கற்கின்ற பிற திறமைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியே அதுவாகும் என குறிப்பிடுகிறார். ஆயினும் இவ்வரையறையும்முழுமையானஒன்றல்ல.

18 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சியினூடாக ஆரம்பித்த விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியானது இன்றைய நவீன யுகத்திலே ஒரு அசுரத்தன்மையான வளர்ச்சியினை கொண்டுள்ளது. அதாவது இத் தொழில் நுட்ப வளர்ச்சியின்மூலமாக கல்வி, மருத்துவம், தொழில் போன்ற விடயங் களில் அதிக பயனை மனிதன் பெறுகின்றமையை நாம் எமது கண்ணூடாக காணமுடியும். இவ்வாறாக மனிதனுக்கு தொழில் நுட்ப வளர்ச்சியினூடாக எவ்வளவு பயன்கள் விளைகின்றனவோ அதேபோல் சில தீமைகளும் ஏற்படவே செய்கின்றன. குறிப்பாக எமது பண்பாட்டு தளத்திலே தொழில்நுட்ப வளர்ச்சியானது மிகப்பெரிய ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் சமுதாயத்தினை சீரழித்து அழிவான பாதைநோக்கிமனிதனை கொண்டு செல்வதாயுமிருக்கிறது. இத் தகைய விளைவுகள் சிலவற்றினை எடுத்துக் கூறுவதனூடாக மக்கள் மத்தியிலே அவர்களின் பண்பாட்டு தளத்தில் இத்தொழில்நுட்ப மாயை ஏற்படுத்துகின்ற விளைவு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.


ஆரம்பங்களிலே பண்பாடு பற்றி நோக்கின் இப்பண்பாடுகள் மக்களினால் சிறப்பாக கடைப் பிடிக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகவும் அதாவது ஒவ்வொரு மக்கள் குழுவும் தமக்கென ஒரு சிறந்த பண் பாட்டினை கொண்டதாகவே இருந்தன. இவை அனைத்தும் அந்த அந்த மக்கள் குழுக்களுக்கு பொதுவான ஒன்றாக இருந்ததுடன் ஒரு மக்கள் குழுவுக்கென காணப்பட்ட பண்பாட்டுக்கும் ஏனைய குழுப்பண் பாட்டிற்கும் இடையில் வேறுபாடும் இருந்தது. அக்காலத்தில் இத்தகைய பண்பாடுகளில் பாரியளவில் கலப்பு ஏற்படவில்லை. ஆயினும் காலம் செல்லச் செல்ல அதிகரித்த விஞ்ஞான தொழில்நுட்ப துரித வளர்ச்சி மக்களிடையே ஏற்பட்டதன் காரண்மாக மக்கள் குழுக்களிடையே தொடர்பாடல்கள், போக்குவரத்துகள், தொழில் வசதிகள் என்பனவும் ஏற்பட தொடங்கின. இதன் காரணமாக ஒரு பண்பாட்டினை அனுசரிக்கின்ற மக்கள் குழு இன்னொரு பண்பாட்டினை அனுசரிக்கின்ற மக்கள் குழுவிடம் சென்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பண்பாட்டு கலப்புக்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக மிகவும் நுணுக்கமான பண்பாட்டினை கொண்டிருந்த பல குழுக்கள் பாதிப் படைந்தன. குறிப்பாக தமிழர் பண்பாட்டினை எடுத்துக் கொண்டால் அங்கு ஒருத்தன் ஒருத்தியை திருமணம் முடிக்க வேண்டும் என்ற பாரம்பரியம் இருந்தது. இதேபோன்று பல்வேறு ஒழுக்க பாரம்பரியங்கள் முக்கிய மானதாக இருந்தது. ஆனால் தொழில் நுட்பம் இதனை இன்று உடைத்தெறிந்துவிட்டது. அதாவது இன்று தமிழ் பெண்கள் தமது பண்பாட்டு பாரம்பரியங்களை மறந்து நவநாகரிகம் என்ற போர்வையில் பல ஆண்களை திருமணம் முடித்தல், மது அருந்தல், நவீன ஆடைகளினை அணிதல் போன்ற செயல் களினை ஆற்றுகின்றனர். இதனால் அன்றைய தமிழர் பண்பாடு தொடர்பான பெண்ணிய ஒழுக்கங்கள் அழிந்து வருகின்றன. இதற்கு தொழில் நுட்ப வளர்ச்சி பண்பாட்டில் ஊறுவிய மையே காரணம்.



கல்வித் தரிசனம்

மேலும் விஞ்ஞான தொழில் நுட்பமானது பண்பாட்டின் முக்கிய கூறுகளான பாரம்பரிய அல்லது மேட்டிமை கலைகளினை அழித்து வருகின்றன. அதாவது ஒவ்வொரு மக்கள் குழுவும் தமக்கென ஒரு சிறப்பான நாட்டியம், நடனம், இசை, கூத்து போன்ற பண்பாட்டு கூறுகளினை கொண்டதாயிருந்தன. ஆனால் இத்தகைய பாரம்பரிய கலைகள் இன்று தொழில்நுட்ப வருகைகளான திரைப்படங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள், கணனிகள் போன்றவற்றினால் மெல்லமெல்ல அழிவடைந்து வருகின்றன. அதாவது எமது அடுத்து வரும் சந்ததிகள் எமது பண்பாட்டு கூறுகளான பாரம்பரிய கலைகள் பற்றி அறிய முடியாத படி இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியானது அவற்றை சிதைத்துவிடுகின்றன.

இதனைவிட ஆரம்பகாலங்களில் மக்கள், சமூகம், குடும்பங்களிடையே ஒரு சிறந்த உறவு முறை காணப்பட்டது. ஆனால் இன்றைய சூழ்நிலைகளில் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இத்தகைய உறவு முறைகளிடையில் பாதிப்பு ஏற்படுகின்றது. அதாவது அதிகரித்துவரும் வேலைகள், தேவைகள்காரணமாகஒவ்வொரு மனிதனும் தன் குடும்பத்திலிருந்து சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு விடுகின்றான். அதாவது தொழில்நுட்ப மாயையானது மக்களுடைய தேவைகளை அதிக ரித்து அவனை அவனுடைய குடும்ப, சமூக உறவுகளிலிருந்து பிரித்துவிடுகின்றன. இதன் காரணமாக பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள் இடையில் சரியான புரிந்துணர்வின்மை, நெருக்கமான உறவு நிலை போன்றவை இல்லாது போய் விடுகிறது. புரிந்துணர்வின்மை பல குடும்பங்களில் பிரச்சினைகளை தோற்றுவிக்கிறது.



மேலும் விஞ்ஞான தொழில் நுட்ப வருகைகளான தொலைக் காட்சிகள், கணணிகள், தொலை பேசிகள் போன்றவற்றினூடாக சில விரும்பத்தகாத ஒழுக்க கேடான விடயங்களும் பரப்பப்பட்டுவருகின்றன. அதாவது இன்று தொலைபேசி, கணனி போன்றவற்றினூடாக ஆபாசப்படங்கள், வன்மம், வக்கிரம் நிறைந்த திரைப்படகாட்சிகள் போன்றவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரினையும் சென்றடையக் கூடிய வசதிகளை தொழில்நுட்பம் ஏற்படுத்திவிட்டது. இதன் காரணமாக பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கொள்ளைகள் போன்றன அதிகளவில் ஏற்பட்டு மக்களுடைய பண்பாடு சீர் கெடுகின்றது.

எமது பண்பாட்டு ரீதியான பாரம்பரிய மருத்துவமுறைகளாக சித்த மருத்துவம், ஆயுள்வேதமருத்துவ முறைகள் காணப்படுகின்றன. இவற்றினைப் பயன்படுத்தியே ஆரம்ப காலத்தில் நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. எதிர்விளைவுகளற்ற நமது பாரம்பரிய மருத்துவ முறையாகும். ஆனால் தொழில் நுட்ப வசதிகாரணமாக நவீன மருத்துவ முறைகள் எழுச்சிபெற்றன. இதன் மூலம் மக்கள் அதிக பயனை பெறினும் இதன்காரணமாக ஒவ்வாமை போன்ற எதிர்விளைவுகளும் ஏற்பட வாய்ப்புகளுண்டு. எமது பண்டைய பாரம்பரியமான வைத்திய முறைகள் உண்மை அறியாமை காரணமாக இன்று மெல்ல மெல்ல அருகி வருவதனை காணமுடியும்.

மேலும் ஆரம்பகாலங்களில் மனிதர் பண்பாடுகளில் முக்கியமான ஒன்றாக உணவுப்பழக்கம் காணப்படுகின்றது. அதாவது ஆரோக் கியமான உணவுகள் போன்றன மக்களி டையே பேணப்பட்டு வந்தது. இதன் காரணமாக அக்கால மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் காணப்பட்டனர். ஆயினும் தொழில் நுட்ப வசதி காரணமாக உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டதால் பல புதிய புதிய உணவு முறைகள் தோற்றம் பெற்றன. இதன் காரணமாக மக்களின் பாரம் பரியமான உணவுப்பழக்கங்கள் அழிவடைய தொடங்கின. இதனால் மக்கள் இன்று அதிக நோய்வாய்ப்பட்டு ஆரோக்கியமின்மை போன்ற நிலைமைகளுக்குட்பட்டவர்களாக காணப்படுகின்றனர். எனவே ஆரோக்கியமான எமது பாரம்பரிய உணவுப் பழக்கமுறைகளுக்கு மாறான பல தீய பழக்கங்கள் மக்களிடையே தோன்றுவதற்கு விஞ்ஞான தொழில் நுட்பம் காரணமாக உள்ளது.

உலகில் மக்கள் தமது பண்பாட்டு கூறுகளில் முக்கியமான ஒன்றாக இசையினை கொண்டிருந்தனர். இத்தகைய இசைகள் ஒவ்வொரு பண்பாட்டு குழுக்களிடையே வேறுபட்ட ஒன்றாகவும் சிறப்பு தன்மை வாய்ந்தனவாகவும் காணப்பட்டன. குறிப்பாக இசைக்கருவிகள் போன்றவற்றில் ஒவ்வொரு பண்பாட்டு குழுவும் விசேடதன்மையை கொண் டிருந்தன. யாழ்ப்பாணத்தை எடுத்து கொண்டால் இங்கு யாழ் முக்கிய இசைக்கருவியாக காணப்பட்டது. இதனைவிட முரசு, பறை போன்ற இசைக்கருவிகளும் காணப்பட்டன. ஆனால் இன்றைய நவீன நவநாகரிக உலகிலேயே தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியினூடாக புதுப்புது இசைக் கருவிகள் தோற்றம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக மக்கள் தாம் பாரம்பரியமாக பேணி வந்த இத்தகைய இசைக்கருவிகள் இன்று அருகி வருகின்றமையை காணலாம்.

இதனைப் போல ஆரம்ப காலத்தில் மக்கள் பல்வேறு திறமைகளினை கொண்டிருந்தனர். அதாவது சோதிடம் பார்த்தல், வாஸ்துசாஸ்திரம் என பலவற்றில் வல்லுநராகவும் அவர்கள் திகழ்ந்தனர். இத்தகைய திறமைகள் அன்றைய பண்பாட்டில் மிகஅதிகமாககாணப்பட்டன ஆனால் இன்று மனிதன் தொழில்நுட்பத்தையே நாடுகின்றான். இதன் காரணமாக அவனுடைய ஆரம்பகாலங்களில் காணப்பட்ட பல்வேறுபட்ட திறமைகள் இன்று அழிவடைந்து வருகின்றமையை காணலாம்.

பண்டைய மக்களிடம் அதிக மனச்சுமைகளோ அல்லது வேலைச் சுமைகளோ பாரிய அளவில் இருக்கவில்லை. இதற்கு அக்கால பண்பாட்டு வாழ்க்கை முறை அவர்களுக்கு உதவியாக இருந்தது. ஆனால் காலம் செல்ல செல்ல இந்நிலை மாற்றமடைந்தது. அதாவது தொழில் நுட்ப வளர்ச்சி மக்களின் பண்பாடுகளில் ஊடுருவ தொடங்கியதன் காரணமாக மனிதன் தன் பண்பாட்டு விழுமியங்களை மறந்து தொழில்நுட்ப மாயைக்குள் அகப்பட்டுக் கொண்டான். இதன் காரணமாக மக்களின் தேவை அதிகரித்தது. இதனை ஈடுசெய்ய மனிதன் அதிகளவில் உழைக்க வேண்டிய தேவையேற்பட்டது அதாவது தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் முதலாளித்துவ சமூகமுறை க்கு அடிமையானான். இதனால் வேலை சுமை அவனைபாதித்து அதிகமனச்சுமையினையும் ஏற்படுத்துவதால் பல மனக்கோளாறுகளுக்கும் அவன் உட்படுகிறான்.


எனவே இன்று நவீன சமூகமானது எவ்வகையிலே தொழில் நுட்பத்தின்மூலம் அசுர வளர்சியை பெற்றுள்ளது என்பதை நாம் காணலாம்.

இதன் காரணமாக தொடர்பாடல், மருத்துவம், போக்குவரத்து போன்ற விடயங்கள் மக்களுக்கு பாரியளவில் நன்மை யினை ஏற்படுத்துவதுடன் நினைத்த இடங்களுக்கு செல்கின்ற வசதி, புதிய புதிய கண்டுபிடிப்புக்கள்தோற்றம் பெற்று மக்களுக்கு அதிகளவில் பயனை ஏற்படுத்துகின்ற விதத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக அமைகின்றதோ அதேபோல இத்தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக தீமைகளும் ஏற்படவே செய்கின்றன. அதிலும் குறிப்பாக பண்பாட்டுத் தளத்தில் பாரதூரமான தீமைகளை ஏற்படுத்துகின்ற ஒன்றாகவே தொழில் நுட்ப வளர்ச்சி நோக்கப்படுகிறது.

வி.சயந்தன்
4ஆம்வருடம்
சிறப்புக் கலை,
மெய்யியல்
யாழ்.பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி யாரிடம் அதிகாரம்!



தமிழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய அரசியல் வரலாற்றிலும் செப்டெம்பர் 27 என்பது முக்கியமான நாளாகிவிட்டது.

அன்றுதான் தமிழக முதல்வரான ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பை அண்டை மாநிலமான கர்நாடகாவில் உள்ள பெங்களூரில் வழங்கப்பட்டது.

அன்றைய தினத்தில், ஜெயலலிதா, சசிகலா, வி.என்.சுதாகரன், இளவரசி ஆகிய அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்கள்.

நீதிமன்றத்துக்கு வெளியே தமிழக அமைச்சர்கள், முன்னணி அ.தி.மு.க. நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என அனைவரும் குவிந்திருந்தனர்.

கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில், சரியாக முற்பகல் 11.30 மணியளவில், உங்களுக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்; என்று ஜெயலலிதாவைப் பார்த்துச் சொன்னார் சிறப்பு நீதிபதி **ஜோன் மைக்கெல் குன்ஹா.**

அதன்பிறகு, பிற்பகலில் வழங்கப்பட்ட தீர்ப்பில், வருமானத்துக்கு மீறிய சொத்துக்களைக் குவித்த வழக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நான்கு வருடம் சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

அவருடன் குற்றஞ்சாட்டப்பட்ட சசிகலா, வி.என்.சுதாகரன், இளவரசி ஆகியோருக்கும் அதே நான்கு வருட சிறை தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது.

சிறைத் தண்டனை என்ற விடயம் இந்த வழக்கில் சர்ச்சையாகவில்லை.

**ஆனால், ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட நூறு கோடி இந்திய ரூபாய் அபராதமும் மற்ற மூவருக்கும் விதிக்கப்பட்டுள்ள தலா பத்துகோடி இந்திய ரூபாய் அபராதமுமே இந்திய ஊழல் ஒழிப்பு போராட்டத்தில் முதன்மையானது.**

அதனால்தான், பெங்களூர் சிறப்பு நீதிபதி ஜோன் மைக்கெல் குன்ஹா வழங்கிய இந்த அபராதம், நாடு முழுவதும் அதிர்வு அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

1996 இல் தாக்கல் செய்யப்பட்ட இந்த சொத்துக் குவிப்பு வழக்கு, ஜெயலலிதாவின் தலைக்கு மேல் தொங்கிய கத்தியாக இருந்தது.

இப்போது 18 வருடங்கள் கழித்து அந்த கத்தி அவரது தலையைப் பதம் பார்த்துவிட்டது.

தேர்தல் போராட்டத்தில் அபரிமிதமான வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்த அவர், சட்டப் போராட்டத்தில் தோல்வியைத் தழுவியிருக்கிறார்.

இதன் பிறகு இந்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங் களுக்கு அவர் மேல்முறையீடு செய்ய முடியும் என்றாலும், முதலில் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிபோய்விட்டது. அடுத்து முதலமைச்சர் பதவியும் போயிருக்கிறது.

இனி அவர் அடைக்கப்பட்டுள்ள பார்ப்பன அக்ரஹாரம் சிறையில் இருந்து பிணையில் வெளிவருவதுதான் முக்கிய பணியாக இருக்கப் போகிறது.

பிணை மனு கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் ஜெயலலிதா.

தசரா விடுமுறையை முன்னிட்டு உயர்நீதிமன்றம் விடுமுறையில் இருக்கிறது.

விடுமுறை கால நீதிபதிகள் முன்பு இந்த பிணை கோரும் மனு விசாரணைக்கு வரும். அதன் பிறகு அரசுக்கு நோட்டீஸ் அனுப்பி, பிணை கொடுப்பதா, வேண்டாமா என்பதை கர்நாடக உயர்நீதிமன்றம் முடிவு செய்யும்.

**இதற்கிடையில் நூறு கோடி இந்திய ரூபாய் அபராதத்தைக் கட்டி விட்டுத்தான் பிணையில் வெளிவர வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கிறது.**

அதாவது, பிணை மனு தாக்கல் செய்யும் போதே இந்த தொகையைக் கட்ட வேண்டும் என்பதுதான் நடைமுறை.

அதற்கு ஏதாவது விதிவிலக்கு கேட்கப்பட்டு, அது கொடுக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பிணையில் வெளிவந்த பிறகுதான் இந்த தீர்ப்பு பற்றிய தனது அறிக்கையை விடுவார் ஜெயலலிதா என்பதுதான் தற்போதுள்ள நிலைமை.

வழக்கு வேறு மாநிலத்தில் நடப்பதால், இப்போது அறிக்கை விட்டு ஏதேனும் சிக்கல் வந்து விடக் கூடாது என்பதில் அவர் மட்டுமல்ல, அவரது வழக்கறிஞர்களும் கவனமாக இருக்கிறார்கள்.

இதற்கிடையில், தமிழகத்தின் முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் தெரிவு செய்யப்பட்டு பதவியேற்றார். இந்த ஊழல் வழக்கைப் பொறுத்தமட்டில், ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலத்தை சீர்குலைத்துள்ளது என்பதுதான் மிக கவலைக்குரிய விடயமாக அ.தி.மு.க.வினரால் கருதப்படுகிறது.

இதற்கு முன்பு சில வழக்குகளில் ஜெயலலிதா முதலில் தண்டிக்கப்பட்ட பிறகு உயர்நீதிமன்றத்துக்கோ உச்சநீதிமன்றத்துக்கோ சென்று விடுதலை பெற்று வந்தார்.

அவற்றுள் முக்கியமான வழக்கு, டான்சி நிலப்பேர வழக்கு. ஆனால் இந்த முறை வழக்கை விசாரித்த நீதிமன்றமும் அதன் மீது மேன்முறையீடு செய்ய வேண் டிய உயர்நீதிமன்றமும் கர்நாடகா மாநிலத்தில் உள்ளது.

அதுவும் இது ஊழல் வழக்கு. அதாவது 66 கோடி இந்திய ரூபாய் சொத்துக் குவித்த வழக்கு. அதனால் இந்த வழக்கில் அவ்வளவு விரைவாக விடுதலை வாங்கிவிட முடியுமா என்ற சந்தேகமான கேள்வியைத்தான் சட்ட வல்லுநர்கள் எழுப்புகிறார்கள்.

இதற்கு முன்பு தமிழகத்தில் அ.தி.மு.க. அமைச்சரவையில் இருந்த பொன்னுச்சாமி என்ற அமைச்சர், இதுபோன்ற ஊழல் வழக்கில் சிக்கினார்.

அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அது சென்னை உயர்நீதிமன்றத்திலும் டெல்லியில் உள்ள உச்சநீதிமன்றத்திலுமே உறுதி செய்யப்பட்டது. அதனால், அவர் தன் சிறை தண்டனைக் காலம் முழுவதும் சிறையில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அமைச்சராக இருந்தவர் கவுன்சிலர் பதவிக்குக்கூட போட்டி போட முடியவில்லை.

இந்நிலையில் லோக்பால், லோக் அயுக்தா என்றெல்லாம் அமைப்புகள் ஆரம்பித்து சட்டங்கள் கொண்டு வந்துள்ள இந்த நேரத்தில், ஊழல் வழக்குகளில் இருந்து ஒருவரை விடுவிக்கும் முன்பு கண்ணில் விளக்கெண்ணெய் விட்டு கவனமாக நீதிபதிகள் பார்ப்பார்கள் என்பதே மூத்த வழக்கறிஞர்களின் கருத்தாக இருக்கிறது.

இந்நிலையில், இந்த தீர்ப்பு குறித்து தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்துமே பாராட்டி கருத்து தெரிவித்துள்ளன.

அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக இருக்கும் கட்சிகள் இதை கண்டித்துள்ளன. ஆனால், தி.மு.க. தலைவர் கருணாநிதியோ இதுவரை வாய் திறக்கவில்லை.

தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோருக்கு கடிதம் எழுதிய கலைஞர் கருணாநிதி, தமிழகத்தில் அரசியல் சட்ட இயந்திரம் தோல்வியடைந்து விட்டது என்று குற்றஞ்சாட்டினார்.

அவரது வீட்டின் மீதும் தி.மு.க.வினர் மீதும் டாக்டர் சுப்ரமணிய சுவாமியின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தியதுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

இதில், அரசியல் சட்ட இயந்திரம் தோல்வியடைந்துவிட்டது என்ற கூற்று, இந்திய அரசியல் சட்டம் 356ஆவது பிரிவின் படி ஒரு மாநில அரசை கலைப்பதற்கு மத்திய அரசு சொல்லும் காரணமாகும்.

அக்காரணத்தை கருணாநிதி சுட்டிக் காட்டவே உடனே அவசர அவசரமாக கலவரங்கள், வன்முறைகள், எதிர்கட்சியினர் மீது தாக்குதல்கள் எல்லாம் குறைக்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டு மூன்றாவது நாளான திங்கட் கிழமை, தமிழகத்தில் அமைதி திரும்பியுள்ளது.

இந்த அமைதியின் பின்னனியில் புதிய முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றார்.

இவர் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது நிதி அமைச்சராக இருந்தவர்.

இதற்கு முன்பு ஒருமுறை ஜெயலலிதா, உச்சநீதிமன்ற தீர்ப்பால் பதவி விலகிய போது இடைக்கால முதலமைச்சராக இருந்தவர். அப்போது அவர் முதல்வரானதும், வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுதலையாகி முதலமைச்சராவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. அப்படியே நடக்கவும் செய்தது.

ஆனால், இந்த முறை அது மாதிரி எதிர்பார்ப்பு எதுவுமில்லை. அதனால், ஓ.பன்னீர்செல்வம் எஞ்சிய ஒன்றரை ஆண்டுகளும் தமிழக முதலமைச்சராக இருக்க வேண்டிய சூழல் உருவாகலாம் என்பதுதான் இன்றைய சூழ்நிலை.

மஹாராஷ்டிரா தேர்தலில் போட்டியிட முடியாது என்று தகுதி இழப்பு செய்யப்பட்ட பால் தாக்ரே, வேறு ஒருவரை முதல்வராக வைத்துவிட்டு ஆட்சி செலுத்தினார்.

அதேபோல்தான், பிரதமராக முடியாது என்ற சூழல் உருவானதும் மன்மோகன் சிங்கை பிரதமராக்கிவிட்டு, தன் அதிகாரத்தைச் செலுத்தினார் சோனியா காந்தி.

அதேபோல் இப்போது, தமிழகத்தில் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு தகுதி இழப்பு பெற்றுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, ஓ.பன்னீர் செல்வத்தை முதல்வராக்கி, ஆட்சியை நடத்தப் போகிறார்.

இந்த மூன்று விடயங்களிலுமே அதிகாரத்தில் பால்தாக்ரே, சோனியா, ஜெயலலிதா இருக்க முடியவில்லையே தவிர, ஆட்சி அதிகாரம் சோனியா, பால்தாக்ரே காட்டும் திசையில்தான் பயணித்தது.

அதேபோல்தான், ஜெயலலிதா விடயத்திலும் தமிழக ஆட்சி அதிகாரம் பயணிக்கப் போகிறது.

புதிய அரசுக்கும், நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும் எப்படி உறவு இருக்கப் போகிறது என்பது போகப் போகத்தான் தெரியும்.

ஏனென்றால் ஜெயலலிதாவுக்கும் மோடிக்கும் வெளிப்படையாக அரசியல் ரீதியான நட்பு தெரிந்தாலும், உள்ளுக்குள் கடும் பனிப்போர்தான் நடைபெற்றது.

அதை கடந்த நூறு நாட்களுக்கும் மேற்பட்ட மத்திய - தமிழக அரசின் உறவுகளில் தெரிந்துகொள்ள முடிந்தது.

மோடி எப்படி டீ விற்றேன் என்று பெருமிதமாக கூறுகிறாரோ, அதே மாதிரி டீக் கடை நடத்தியவன் என்று பெருமிதமாகக் கூறியவர்தான் ஓ.பன்னீர்செல்வம்.

அந்த வகையில் இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தில் சாமான்ய மக்களின் பிரதிநிதியாக எப்படி நரேந்திர மோடி பிரதமராக இருக்கிறாரோ, அதேபோல் சாதாரண, சாமான்ய மக்களின் பிரதிநிதியாக தமிழக முதலமைச்சராகியிருக்கிறார் ஓ.பன்னீர் செல்வம்!

*-எம்.காசிநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை- மியன்மார் கடும்போக்கு பௌத்த அமைப்புகள் முஸ்லிம்களுக்கு எதிராக

# ஒப்பந்தம்

## சர்வதேச ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளின் கடும்போக்குடைய பௌத்த அமைப்புக்கள் இரண்டு முஸ்லிம்களுக்கு எதிராக ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக றொய்டர்ஸ் சர்வதேச ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அஷீன் விராது பௌத்த தேரரின் தலைமையிலான மியன்மாரின் 969 பௌத்த அமைப்பிற்கும், கிரம விமல ஜோதி தேரரின் தலைமையிலான பொதுபல சேனா இயக்கத்திற்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தீவிரவாத முஸ்லிம் அமைப்புக்களிடமிருந்து பௌத்தர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர்களினால் பிராந்திய வலயத்தில் மேற்கொள்ளப்படும் மத மாற்றங்களுக்கு எதிரான முதல் கட்ட நடவடிக்கையாக பொதுபல சேனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எனவும் இந்த அமைப்பு விஸ்தரிக்கப்படும் எனவும் விராது தேரர் தெரிவித்துள்ளார்.

கடும்போக்குடைய முஸ்லிம்கள் பௌத்தர்களை மதம் மாற்றி வருவதாகவும் அதனை தடுத்து நிறுத்த முயற்சி எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஒப்பந்தத்தில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

எவ்வாறெனினும் இந்த ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டக் கூடுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடும்போக்குவாதத்தை இல்லாதொழித்து பிராந்தியத்தில் சமாதானத்தை நிலைநாட்ட இந்த ஒப்பந்தம் வழியமைக்கும் என பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமல ஜோதி தேரர் தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் உள்ள இயக்கத்தின் தலைமையகத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அஷீன் விராது தேரர் மற்றும் கலபொட அத்தே ஞானசார தேரர் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (இ)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர். ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஜனாதிபதி இந்த மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, பரீட்சை ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஊவா மாகாணத் தேர்தலில் அரசை தமிழ் பேசும் மக்கள் நிராகரித்தனர்

## வேலாயுதம் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலில் தமிழ் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தை நிராகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இம்முறை அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர். அரசாங்கத்திற்கு சிறந்த பாடமொன்றை புகட்டியுள்ளனர்.

நாளுக்கு நாள் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதனால் வாழ்வதற்காக உரிமையே பாரியளவில் சவாலுக்குள்ளாகியுள்ளது.

தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து அரசாங்கம் பாரியளவில் நிவாரணங்களையும் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்தது.

அதேநேரம் அரசாங்கம் பாரியளவில் தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்டது.

எனினும் இந்த அழுத்தங்களுக்கு எதிராக ஊவா மாகாண தமிழ் முஸ்லிம் மக்கள் சிறந்த பாடமொன்றை அரசாங்கத்திற்கு புகட்டியுள்ளனர்.

தமிழ் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தை வேண்டாம் என்றே குறிப்பிடுகின்றனர்.

சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஓரளவிறகேனும் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக அடிக்கடி குரல் கொடுக்கும் விமல் வீரவன்ச தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு எதிராக குரல்கொடுக்கும் இனவாத அமைப்புக்களுடன் இணைந்து கொண்டு செயற்படுகின்றார்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை விவகாரங்களில் இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் தலையீடு செய்யக் கூடாது எனக் கோரும் அதிகாரம் விமல் வீரவன்சவிற்கு கிடையாது.

பல்வேறு இன மக்களிடையே ஐக்கியம் ஏற்படுவதனை எதிர்க்கும் இவ்வாறான நபர்களின் நடவடிக்கைகளினால் தமிழ், முஸ்லிம் மக்கள் சர்வதேசத்தின் ஒத்துழைப்பை நாடுவதாக வேலாயுதம் தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## மகிழ்ச்சியின் இரகசியம்

ஒரு மன்னர் இருந்தார். நாடு பூராகவும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்பது அவரது ஆசை. தாமே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆகவே அரண்மனையைச் சுற்றி நிறைய மரங்களை நட்டு வளர்த்தார்.

அரசர் இப்படிச் செய்வதைப் பார்த்ததும் குடிமக்களும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தார்கள். அவரவர் வீட்டை சுற்றிலும் விதம்விதமான மரக்கன்றுகளை வைத்து வளர்க்கத் தொடங்கினார் கள். கொஞ்ச நாளில் ஊர் பூராகவும் பசுமையாக மாறியது. மக்களுக்கும் மகிழ்ச்சி. மன்னருக்கும் மகிழ்ச்சி.ஒருநாள் அந்த மன்னர் தம் அரண்மனையை விட்டு வெளியே வந்தார். வளர்ந்திருக்கிற பலவிதமான மரங்களையும் பார்த்தார். அருகில் சென்று நலம் விசாரித்தார்.ஒவ்வொரு மரத்தின் அருகேயும் போய் நின்று எப்படி இருக்கீங்க? என்ற விசாரித்தார்.

எந்த மரமும் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மரத்துக்கும் மனசுக்குள் ஒரு குறை இருந்தது.முதலில் ஓர் ஆலமரத்தை நெருங்கினார். அது சொல்லிற்று. "மன்னா! நான் நல்லா பெரிசா வளர்ந்திருக்கேன். அடர்த்தியா இருக்கேன். கிளையெல்லாம் நாலு பக்கமும் நல்லா படர்ந்து இருக்கு. இருந்தாலும் என்ன பிரயோஜனம்? என்னுடைய கனி கள் ரொம்பச் சின்னதா இருக்கே... என் கண்ணுக்கே அது சரியாகப் புலப்பட மாட்டேங்குதே.. நான் இருக்கிற உருவத்துக்கு.. என் கிளையிலே இருக்கிற பழம் எவ்வளவு பெரிசா இருக்கணும்? அது இத்துணூண்டு இருக்கிறது. எனக்குப்பெரிய அவமானமா இருக்கு. இப்படி இங்கே நின்னுக்கிட்டிருக்கறதே ரொம்பக் கூச்சமா இருக்கு! ஒரு நல்ல புயல் வந்தா பேசாமே சாஞ்சுடலாமான்னு பார்க்கிறேன்...!"

இது ஆலமரத்தின் புலம்பல்.

இதைக் கேட்டுவிட்டு மன்னர் அப்பால் நகர்ந்தார். அங்கே இருந்த அத்திமரம் பேச ஆரம்பித்தது.

"நான் கூடப் பெரிய மரம்தான். இலை அழகா இருக்கு... பழம் அழகாயிருக்கு... இருந்தாலும் உள்ளே விஷயம் இல்லையே! அத்திப்பழத்தைப்பிட்டுப் பார்த்தா அத்தனையும் சொத்தைன்னு பழமொழியே உண்டாயிட்டுதே. இப்படி ஒரு கெட்ட பெயரோட நான் இருக்கணுமா?"

இதையும் கேட்டுவிட்டு மன்னர் அப்பால் நகர்ந்தார்.

அடுத்திருந்தவேப்பமரம்தன்வேதனையைவெளிப்படுத்தியிருந்தது.

"எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்கள் இருக்கிறதாக சொல்லுறாங்கள் .இருந்தாலும் என்ன பலன் என்னுடைய பழத்தை மனிதர்கள் விரும்பி சாப்பிடுவதில்லையே...!"

அரசர் அடுத்தாற்போல் இருந்த பனைமரத்தை நெருங்கினார்.

"நான் நல்லா உயரமாகத்தான் வளர்ந்திருக்கேன். ஏனைய மரங்களெல்லாம் என்னை அண்ணாந்து தான் பார்க்கணும். அந்த வகையில் எனக்கு பெருமைதான். இருந்தாலும் என்கிட்டே நிழலுக்காக யாரும் வந்து ஒதுங்கிறதில்லை!"

என்ன இது... எந்த மரமும் மனநிறைவு இல்லாமலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனவே...! என்று நினைத்தபடியே மன்னர் அப்பால் சென்றார். அங்கே நின்று கொண்டிருந்தது ஒரு பைன் மரம். அது அழகாக இருந்தது. உயரமாக இருந்தது. பசுமையாக இருந்தது. ஆனால் பழமோ, பூவோ கிடையாது. அதை நினைத்து அது வருந்திக் கொண்டிருந்தது.

அடுத்து ஓக் மரம் ஒன்று நின்று கொண்டிருந்தது.

"இலையுதிர் காலத்தில் என் மேல் உள்ள அத்தனை இலைகளும் உதிர்ந்துவிடுகின்றன. மொட்டை மனிதர்கள் மாதிரி மொட்டையாக நான் நிற்க வேண்டியிருக்கு! என்ன வாழ்க்கை இது" என்றது அது.சரி..புளிய மரம் என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.

"என்னுடைய நிழலில் யாருமே தங்கமாட்டார்கள். உடம்புக்குச் சூடு என்று ஒதுங்கிப் போய்விடுவார்கள். அடி மரத்தைப் பாருங்கள்... பட்டையெல்லாம் உதிர்ந்து பார்ப்பதற்கே கேவலமாக இருப்பேன்...!" என்று அது புலம்புகிறது.

முருங்கை மரம் என்ன சொல்லுகிறது தெரியுமா?

"என்னுடைய இலை, காய் எல்லாம் சாப்பிடுகிறவர்களுக்குச் சத்து கொடுப்பது உண்மைதான். ஆனால் என் உடம்பில் சத்தே இல்லையே! கொஞ்சம் வேகமாகக் காத்து அடிச்சாப் போதும்... முறிஞ்சு விழுந்துடறேன். என்ன வாழ்க்கை இது...!"

மன்னர் யோசித்தார்.

என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பொழிவதற்கே மரங்கள் தான் காரணம். பூமி செழிப்பாக இருப்பதற்கும் அவைதான் காரணம். வீடு கட்டவும் மரம் உதவுகிறது. மனிதனுக்கு உணவும் ஆகிறது. இப்படியெல்லாம் இருந்தும் எல்லா மரங்களும் நிம்மதி இல்லாமல் இருக்கின்றனவே...!இப்படி சிந்தித்துக் கொண்டே நகர்ந்த மன்னரின் முன்னால் ஒரு மகிழமரம் தென்பட்டது. அது மட்டும் நிம்மதியாக மகிழ்ச்சியாக இருப்பது போலத்தான் தோன்றியது. அருகில் சென்றார்.

"உனக்கு மனசிலே ஏதும் குறை இல்லையா?"

"இல்லை. நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன்."

"அப்படியா!"

"ஆமாம் மன்னா... இந்த இடத்திலே ஒரு முருங்கை மரத்தையோ... வேப்ப மரத்தையோ நடாமல், இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்குப் பெருமை. அதுவே எனக்குத் திருப்தி "என்றது மகிழ மரம்.மகிழமரம் சாதாரணமாகத் தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்ந்ததும் மணம் வீசும். மகிழ மரம் மாதிரி மனநிறைவோடு வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.நாம் இந்த உலகத்தில் ஒரு நாயாகவோ, நரியாகவோ கூடப் பிறந்திருக்க லாம். மனிதனாக பிறந்திருக்கிறோமே... அதுவே ஒரு பெருமை யில்லையா? இந்த நிறைவு தான் மகிழ்ச்சியின் இரகசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மோடிக்கு கடிதம்

## தமிழக முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வம் முதல் கடிதம்

இலங்கை கடற்படை சிறை பிடித்த 20 மீனவர்கள் மற்றும் 75 படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதமருக்கு ஓ.பன்னீர்ச்செல்வம் கடிதம் அனுப்பியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு தமழக முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் எழுதியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது,

எங்களது தலைவி ஜெயலலிதாவின் ஓயாத இடைவிடா முயற்சியின் காரணமாக இலங்கை சிறையில் இருந்த 76 மீனவர்களை இல ங்கை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. அவர்களில் 72 பேர் தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள்.

ஆனால் அவர்களது படகுகள் விடுவிக்கப்படவில்லை. தங்களது சீரிய தலைமையின் கீழ் இயங்கும் மத்திய அரசின் உதவியால் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 71 மீன்பிடி படகுகளை இலங்கை அரசு இன்னும் விடுவிக்கவில்லை. அவை மழையின் காரணமாக உபயோகமற்றதாகி விடும். எனவே மேலும் சேதமடைந்துபழுதடைவதை தடுக்க விரைவில் தொடங்க இருக்கும வடகிழக்குபருவமழைக்கு முனபே அவற்றை விடுவிக்க வேண்டும்.

கடந்த மாதம் 27ஆம் திகதி இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தை சேர்ந்த 4 மீனவர்கள் பயணம் செய்த படகு தொழில்நுட்ப கோளாறு காரணமாக காற்று மற்றும் நீரோட்டத்தால் இழுத்துச் செல்லப்பட்டது. 28ஆம் திகதி அவர்களை கைது செய்த இலங்கை கடற்படை காங்கேசன்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி 29ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதிவரை நீதிமன்ற காவலில் வைத்துள்ளனர் என்ற மற்றொரு தகவலையும் தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். கடந்த 29ஆம்திகதி புதுக்கோட்டை மாவட்டம் கோட்டை பட்டினத்தில் இருந்து 4 படகுகளில் 16 மீனவர்கள கடலில் மீன்பிடிக்க சென்றனர். கடந்த 30ஆம் திகதி அதிகாலையில் இவர்களைஇலங்கை கடற்படை கைது செய்து சிறைக்கு கொண்டு சென்றது.

தமிழக மீனவர்கள் பாக்ஜலசந்தி பகுதியில் மீன்பிடிக்க பாரம்பரிய உரிமைகள் இருநதும் இலங்கை கடற்படையினரால அவர்களுக்கு தொடர்ந்து பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறன.

கடந்த 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தப்படி சட்டவிரோதமாக கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்ததை எதிர்த்தும் மீனவர்களின் சர்வதேச கடல எல்லை வரையறை குறித்தும் தமிழக அரசு சார்பிலும், எங்களது அன்பு தலைவரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா சார்பிலும் உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த கடிதத்தில் முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் மேலும் தெரிவித்துள்ளார். (இ)




# பாகிஸ்தானில் 25 இந்திய மீனவர்கள் கைதாகினர்

(சென்னை)

அரபிக்கடலில், இந்திய-பாகிஸ்தான் எல்லை சரியாக வரையறுக்கப்படவில்லை. இதனால் இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் சென்று மீன் பிடிப்பதும், பாகிஸ்தான் மீனவர்கள் இந்திய எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பதும் தொடர்கதை ஆகிவருகிறது.

இதனால் அவர்கள்மீது கைது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் எல்லை தாண்டிச் சென்று மீன்பிடித்ததாக இந்திய மீனவர்கள் 25 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் பாகிஸ்தானை சேர்ந்த 37 மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் இந்தியா விடுதலை செய்தது. இதேபோன்று பாகிஸ்தானும் 151 இந்திய மீனவர்களை விடுதலை செய்தது. அவர்களின் 57 மீன்பிடி படகுகளையும் விடுவித்தது.

பிரதமராக மோடி பதவி ஏற்றபோது, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் வருகை தந்து வாழ்த்தியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை அமைந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

பாரதச் செய்தி

# தீவிரவாதத்தை நாம் இல்லாதொழிப்போம்

## ஒபாமா-மோடி சபதம்

இந்தியா- அமெரிக்கா இடையேயான இரு தரப்பு உறவை புதிய கட்டத்துக்கு எடுத்து செல்ல ஒபாமா மற்றும் மோடி ஆகிய இரு தலைவர்களும் உறுதி அளித்தனர்.

வெள்ளை மாளிகையில உள்ள ஓவல் அலுவலகத்தில் ஒபாமா- மோடி சந்திப்பு சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தை இந்தியாவும் அமெரிக்காவும் இயற்கையான கூட்டாளிகள் என்பதை வலுப்படுதுவதாக அமையும் என்று தான் நம்புவதாக மோடி தெரிவித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. அமெரிக்க சந்தையில் இந்திய சேவை நிறுவனங்களுக்கான எளிமையான நடைமுறை அளிக்க வேண்டும் என்று பிரதமர் மோடி ஒபாமாவிடம் வலியுறுத்தினார்.

இதுகுறித்து, பத்திரிகையாளர்கள் இடையில் பேசிய ஒபாமா, இந்திய பிரதமரை அமெரிக்காவுக்கு வரவேற்கிறேன். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், அணுசக்தி பயன்பாடு, பருவநிலை மாறுபாடு பற்றி பேசினோம். உலக வர்த்தக உடன்பாடு பற்றியும் பேசப்பட்டது என்று தெரிவித்தார்.

பின்னர் மோடி பேசுகையில், முதலில் என்னை அழைத்ததற்கு ஒபாமாவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள கிறேன். இந்திய-அமெரிக்க செயற்கைக்கோள்கள் சமீபத்தில் செவ்வாய் கிரகத்தில் சந்தித்துக் கொண்டன. செவ்வாயில் நடைபெற்ற இந்திய-அமெரிக்க கோள்களின் மாநாட்டுக்கு பின்னர், தற்போது, பூமியில் நாங்கள் (மோடி-ஒபாமா) சந்தித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினார்.

இந்தியாவும், அமெரிக்காவும் இயற்கையிலேயே சிறந்த நட்பு நாடுகள். அமெரிக்க ஜனாதிபதியும், நானும் பொருளாதார விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. எங்களது பொருளாதார உறவுகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் சிறப்பாக இருக்கும்.

தெற்கு மற்றும் மேற்காசியாவில் நிலவும், பயங்கரவாத பிரச்சினை பற்றியும் பேசினோம்.தீவிரவாதத்துக்கு எதிராக இரு நாடுகளும் சேர்ந்து பாடுபடும். கடந்த 4 நாட்களாக அமெரிக்காவில் நான் பயணம் செய்தபோது, இந்தியா மீது அமெரிக்க மக்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது தெரிந்தது. குடும்பத்துடன் இந்தியாவுக்கு வருமாறு ஒபாமாவை அழைத்துள்ளேன் என்றும் மோடி தெரிவித்தார்.

### செயற்கை கோள்கள் செவ்வாயில் சந்தித்தன நானும் மோடியும் பூமியில் சந்தித்தோம் ஒபாமா பெருமிதம்

மோடியின்அழைப்பைஏற்று ஒபாமா இந்தியாவுக்கு வருவாரேயானால், அமெரிக்க ஜனாதிபதி பதவி வகித்த காலத்தில், அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு இரு முறை வந்த அமெரிக்க ஜனாதிபதி என்ற சிறப்பு அவரைச் சேரும். (இ)

# அமெரிக்க கோடீஸ்வரர் பட்டியலில் இந்தியர்கள் ஐந்து பேர் உள்ளனர்

அமெரிக்காவில் கோடீஸ்வரர்கள் பட்டியலில் 5 அமெரிக்க இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில் மிகப் பெரும் பணக்காரர்கள் அடங்கிய '400 பேர் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் அமெரிக்க இந்தியர்களான சின்டெல் நிறுவனத்தின் தலைவர் பரத் தேசாய் (சொத்து மதிப்பு 2.5 பில்லியன்டொலர்), மருந்து தயாரிப்பு மற்றும் ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஜான் கபூர் (2.5 பில்லியன் டொலர்), சிம்பொனி. தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறுவனர் வாத்வானி (3 பில்லியன் டொலர்), ஷெர்பாலோ வென்சர்ஸ் நிறுவனத்தின் தலைவர் ராம் ராம் (1,87 பில்லியன் டொலர்). கோஸ்லா வென்சர்ஸ் நிறுவனத்தின் தலைவர் வினோத் கோஸ்லா (1.67 பில்லியன் டொலர்) ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (இ)

# உ.பி.யில் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மோதி விபத்து

## 12 பேர் பலி; 12 பேர் படுகாயம், 45 பேர் காயம்!



உத்தரப்பிரதேச மாநிலத்தில் எக்ஸ்பிரஸ் புகையிரதங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் பலியாகினர், 45 பேர் காயமடைந்தனர். 12 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாரணாசியில் இருந்து கோரக்பூர் நோக்கி வந்து கொண்டிருந்த கிரிஷாக் எக்ஸ்பிரஸ் புகையிரதமும், லக்னோவில் இருந்து பரூனி நோக்கி சென்று கொண்டிருந்த பரூனி எக்ஸ்பிரஸ் புகையிரதமும் கோரக்பூரில் இருந்து 7 கி.மீ. தொலைவில ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன. இரவு 11 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் 12 பேர்சம்பவ இடத்திலேயே பலியாகினர். 45 பேர் படுகாயமடைந்தனர். மேலும் 12 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என புகையிரத செய்தித் தொடர்பாளர் அனில் சாகசேனா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த விபத்தைத் தொடர்ந்து கோராக்பூர்-வாரணாசி பாதையில் புகையிரத சேவை பாதிக்கப்பட் டுள்ளது.

போக்குவரத்து விதிகளை கிரிஷாக் எக்ஸ்பிரஸ் புகையிரதம் ஓட்டுநர் மீறியதால், அவரை புகையிரத நிர்வாகம் பணி இடை நீக்கம் செய்துள்ளது. விபத்து குறிதது விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக புகையிரத பாதுகாப்பு ஆணையர் பாஜ்பாய் தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் நடைபெற்ற நிகழ்வுகள்




உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று பாடசாலை மட்டங்களில் பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

அதன் அடிப்படையில் வவுனியா மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர்கள் தமது பாதுகாப்பையும் உரிமைகளையும் வலியுறுத்தி பதாகை களில் எழுதப்பட்டிரு க்கும் வாசகங்களுடன் கவன யீர்ப்பு நடையபண ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். இதே வேளை துணுக்காய் கல்வி வலயத்திற் குட்பட்ட 60 பாடசாலை களில் உள்ள 8 ஆயிரத்து 500 இற்குமேற்பட்ட மாணவர்கள் சர்வேதச சிறுவர் தினத்தை நேற்று கொண்டாடி யுள்ளனர். இந்நிகழ்வு தொடர் பாகத் தெரியவருவதாவது, சர்வதேச சிறுவர் தினத்தை முன் னிட்டு துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 60 பாடசாலை களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தியும் மற்றும் சிற்றுண்டி வகைகளை பரிமாறியும் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

இந்நிகழ்வுகளை துணுக்காய் வலயக்கல்விப் பணிப் பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தனது வல யக்கல்வி அதிகாரிகளூடாக நேரடியாக நெறிப்படுத்தியதுடன் மு/ மாங்குளம் மகாவித்தி யா லயத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தினவிழாவிலும் பங்கேற்றுள்ளார். (2-15-250)

## ஆலமரங்களின் கீழ் புதுக்குடியிருப்பு சந்தை



யுத்த காலத்தில் விமான தாக்குதலுக்கு பயந்து ஆலமர மரங்களின் கீழ் சநதைகள் நடந்தது போல் இன்றும் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்த பின்பும் கூட புதுக்குடியிருப்பு சந்தை ஆலமர மரங்களின் கீழ் செயற்பட்டு வருகிறது என வைத்திய கலாநிதி சி. சிவமோகன் ஆதங்கத்துடன் கருத்து தெரிவித்தார்.

முல்லை.மாவட்டத்தில் வருமானம் கூடிய சந்தை புதுக் குடியிருப்பு சந்தையாகும். மக்களின் வரிப்பணத்தில் எமது மக்களுக்காக 50 இலட்சம் பெறுமதியில் ஒரு மீன் சந்தை அமை க்கப்பட உள்ளது. அதை அமைப்புதில் பலத்த இழுபறி நிலவிய நிலையில் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுபபினர ந. சிவசக்தி ஆனந்தன், வடமாகாண் சபை உறுப்பினர் சி. சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு சந்தை அபிவிருத்தக் குழு உறுப்பினர்கள் சகிதம் நடைபெற்றது. இறுதியாக 'உடனடியாக மீன்சந்தைக் கட்டடத் திற்குரிய வேலைகளை ஆரம்பிப்பது என ஏற்றுக்கொள்ளப் பட்டது. எதுவர்கிலும் மக்களுக்கான சந்தைக்கான கல்நாட்டும் நிகழ்வு நடந்தால் போதும் என வடமாகாண சபை உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார். (2-250)

# வட்டுவாகல் கடல்நீர் ஏரியில் இறந்த மீன்களை அகற்றும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது

### முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முல்லைத்தீவு நந்தி கடல் நீரேரியின் வட்டுவாகல் பாலத்திற்கு அருகிலான களப்பு பகுதியில் நாளாந்தம் பெருமளவில் மீன்கள் இறந்து மிதப்பதனால் இப்பகுதியூடாக பயணிக்கும் பொதுமக்களும் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களும் துர்நாற்றத்தினால் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக இப்பகுதியில் நிலவும் கடும்வெப்பம் காரணமாகவும் மழையின்மையாலும் நீரேரியில் நீர் வற்றிச் செல்கின்ற நிலையில் உப்பின் செறிவு அதிகரித்துச் செல்கின்ற காரணத்தினால் குறித்த கடல் நீரேரியிலுள்ள மீன்கள் நாளாந்தம் பெருமளவில் இறந்து மிதந்து கரையொதுங்கின.

இந்நிலையில் இறந்த மீன்களை கடல் நீரேரியிலிருந்து அகற்றும் செயற்பாட்டினை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தொழிலாளர்களும் அப்பகுதி சுகாதார பரிசோதகர்களும் வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் அமைப்பினரும் அப்பகுதியிலுள்ள இராணுவத்தினரின் உதவியுடன் சபையின் வாகனங்களுடனும் சபையால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களையும் பயன்படுத்தி அப்புறப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருவதாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

மக்களினதும் சூழலினதும் பாதுகாப்பு கருதி நேர காலம் பாராது கடந்த 29 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக இறந்த மீன்களை அகற்றும் பணி நடைபெற்று வருவதாக அவர் .மேலும் தெரிவித்துள்ளார். (2)

## துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விநாடிவினா போட்டி நாளை

(மல்லாவி)

போக்கியோ தனியார் சீமெந்து கம்பனியும் சுவர்ணவாகினி தொலைக்காட்சி நிறுவனத்தினரும் கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலைகளுக்கிடையில் விநாடி வினா போட்டியொன்றினை ஒழுங்கு செய்துள்ளதாக வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப்பணிப் பாளர் (பொது நிர்வாகம்) மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியானது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மு/வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறும். இப்போட்டியில் பங்கேற்கும் பாடசாலை அணிகள் வருமாறு.

துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டு மகாவித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மு/பாண்டிக் குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும் முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து மு/வித்தியானந்தாக் கல்லூரி, மு/செம்மலை மகா வித்தியாலயம், மு/குமுழமுனை மகா வித்தியாலயம், மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பங்கேற்கவுள்ளன.

ஏற்கனவே போட்டிக்கு விண்ணப்பிக்காத ஏனைய பாடசாலைகள் பங்கேற்க விரும்பின் அப்பாடசாலைகளும் போட்டி நடைபெறும் இடத்திற்கு நான்கு போட்டியாளர்களுடனும் இரண்டு மேலதிக போட்டியாளர்களுமாக மொத்தம் ஆறு பேர் கொண்ட அணி இப்போட்டியில் கலந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார். இப் போட்டியானது பொது அறிவு வினாக்களை உள்ளடங்கியதாக நடைபெறவுள்ளது என அவர் தெரிவித்தார். (2-15)




## பாடசாலை அதிபர், ஆசிரியரின் ஊக்கமே வெற்றிக்கு காரணம்



(கிளிநொச்சி)

மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு சிறந்த வைத்தியராக வரவேண்டும் என்ற விடாமுயற்சியிலேயே எனது கல்வியை தொடர்கின்றேன். இவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற மாணவர்களில் ஒருவரான விஜயகுமார் மதுமிதா கூறுகின்றார்.

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் மதுமிதா தனது இலட்சியம் குறித்து வலம்புரிக்கு தெரிவிக்கையில்,

இந்த வெற்றிக்கு எனது பாடசாலையின் அதிபரே முழுமையான காரணமாகும்.

எமது பாடசாலை அதிபரின் கட்டுப்பாடும் அவர் மாணவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற மேலோங்கியசிந்தனையும் அதிபருடன் இணைந்த ஆசிரியரின் அயராத விடாமுயற்சியுமே இந்த வெற்றிக்கு காரணமாகும்.

அத்துடன் தரம் ஒன்று தொடக்கம் 5 வரை ஒரே ஆசிரியரின் வழிகாட்டலே இந்த வெற்றிக்கு காரணமாகும். நான் ஆசிரியர் தருவதை அன்றே மனனம் செய்வேன்.

அத்துடன் மேலதிகமாக ரியூசன் வகுப்புக்களு க்கும் நான் செல்வதில்லை. நீங்களும் நன்றாக படித்து என்னைப் போன்று கல்வியில் வளர்ச்சியடைய வேண்டும் என்று மதுமிதா கூறினார். (2-271)

## மாவட்ட அதிகாரியாக உருவெடுத்து சேவை செய்வதே எனது இலட்சியம்



(கிளிநொச்சி)

மாவட்ட அதிகாரியாக வரவேண்டும் என்பதே எனது ஆசை. அந்த இலக்கோடு ஆசிரியர் படிப்பித்ததை மீண்டும் அன்றே மனப்பாடம் செய்ததால்தான் என்னால் முன்னிலைக்கு வரமுடிந்தது என்று கூறுகின்றார் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று கிளி.மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவர்களில் ஒருவரான சிவகுமார் கயல்விழி.

கிளி/தருமபுரம் இல.01 - அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் கயல்விழி தனது வெற்றி குறித்து வலம்புரிக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில்,

இந்த வெற்றிக்கு எனது வறுமையும் பெற்றோரும் ஆசிரியரின் அயராத உழைப்புமே காரணமாகும்.

எனது பெற்றோர் வறுமையிலும் என்னை அதிகாலை 4 மணிக்கு எழுப்பி என்னுடனே இருப்பார்கள். பின் பாடசாலை சென்று வந்தவுடன் ரீயூசனுக்கு கொண்டு சென்றுவிட்டு ஏற்றி வருவார்கள். அங்கு படிப்பித்த ஆசிரியரே எனது வெற்றிக்கு காரணமாகும்.

நான் எதிர்காலத்தில் என்னை போன்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே மாவட்ட அதிகாரியாக வரவேண்டும் என்ற இலட்சியத்தைஎண்ணி இதனைநிறைவேற்ற அயராது படிப்பேன்.

நான் ஆசிரியர் படிப்பிப்பதை மீண்டும் அன்றே மனப்பாடம் செய்வதால் தான் என்னால் முன்னிலைக்கு வர முடிந்தது. ஆசிரியர் தருவதை அன்றாடம் மனப்பாடம் செய்தால் நீங்களும் என்னைவிட அதிக புள்ளி பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்திற்கு வர முடியும் என்றார் கயல்விழி. (2-271)

## விடாமுயற்சியுடன் கல்வி கற்று நிச்சயம் வைத்தியராவேன்



(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் எம் மண்ணில் ஒரு வைத்தியராக கடமையாற்றவிரும்புகின்றேன். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாணவர்களில் ஒருவரான ஜீவகன் லிதுர்ஷன் தெரிவித்துள்ளார்.

கிளி. மாவட்டத்தில் 183 புள்ளிகளைப் பெற்ற கண்ணகி நகர் தருமபுரம் கிளி.அம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மேற்குறித்த மாணவன் வலம்புரிக்கு தெரிவிக்கையில்,

இந்த வெற்றிக்கு எனது வகுப்பாசிரியர், அதிபர், பெற்றோர், ரியூசன் ஆசிரியர்களே காரணமாகும். அத்துடன் தன்நம்பிக்கையும் விடாமுயற்சியும் புதிய விடயங்களை தேடிப்படிப்பதுடன் ஆசிரியர் தருவதை அன்றாடம் மனனம் செய்வேன். அதுவே எனது வெற்றிக்கு பெரிதும் காரணமாகும்.

நான் ஒரு வைத்தியராக வந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவி செய்வேன். நான் வைத்தியராக வருவதற்கு தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் புதிய புதிய தேடல்கள் மூலமும் செயற்பட்டு நிச்சயமாக ஒரு வைத்தியராக வருவேன். அத்துடன் எங்கள் கிராமத்தில் மின்சார வசதியில்லை.

பாடசாலையில் எந்தவொரு வசதிகளுமில்லை. இவைகள் இல்லாமலே எங்கள் பாடசாலையில் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளை மாணவர்கள் பெற்று சித்தியடைந்துள்ளனர். எங்களுக்கு அனைத்து வசதிகளும் இருந்தால் இன்னும் நிறைய மாணவர்கள் என்னைப்போன்று மாவட்டத்தில் முதலிடத்துக்கு வருவார்கள் என்றார் லிதுர்சன். (2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.நா.மனிதவுரிமைச்சபை ஏற்படுத்தும் தாக்கங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

போர்பற்றிய ஐ.நா.வின் அக்றைகள் மட்டில் அரசு மேற்கொள்ளும் உள்ளக விசாரணை வழிமுறைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் சாட்சிவழங்குபவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள்மட்டிலான மசோதாவொன்று நாளையே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். ஆகக் கூடுதல் மனவருத்தத்திற்குரிய விடயமென்னவென்றால் 'OHCHR'மீது நிர்ப்பந்தமாக திணிக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு விசாரணைக்கான தலையீட்டு அதிகாரம் அதற்கு உண்மையில் ஆணையளிக்கப்பட்டிருக்கும். அதிகாரத்தையும் மீறிய தன்மையினதாக இருப்பதுமட்டுமல்லாது நாட்டிற்குள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளக விசாரணைப் பொறிமுறைகள் முற்றிலும் அசட்டை செய்வதாகவுமே உள்ளது.

நாட்டுமக்களிடையே உள்ளார்ந்திருக்கும் ஆழமான சமூக, கலாசார மற்றும் இனரீதியான பாரம்பரிய விழுமியங்களை பாதிக்கக் கூடிய நிலைமைகளை அது சிறிதும் கருத்திற்கொள்ளாதது ஏற்கனவே இடம்பெற்று வரும் சிக்கலான இன இணக்கப்பாட்டு வழிமுறைகளை ஆபத்திற்குட்படுத்துவதுடன் நாட்டின் சமாதானத்திற்கு நிலையாகவும் தன்மைக்கும் குழப்பமான முறையில் ஊறு விளைவிப்பதாகவுமிருக்கிறது என அவர்மேலும் கூறியிருந்தார்.

அதேநேரத்தில் செயட் பின் அல் ஹுசெனது புதிய ஆணையாளர் நியமனத்தை வர வேற்றுபேசிய ஆரியசிங்ஹ, புதியவருக்கு இருக்கும் பரந்துபட்ட இராஜதந்திர அனுபவத்துடன்ஐ.நா.ஒழுங்கு முறைகள் மட்டில் அவருக்கிருக்கும் ஆழமான அறிவு மற்றும் சமூக மற்றும் கலாசார குணநலங்கள் மீதான மதிப்பு போன்றவை 'OHCHR' ன் செயற்பாடுகளை வழிநடத்தும் நிலையான சொத்தாகவுமிருக்குமென அவர் கூறினார்.

அத்துடன் அவருக்கு இருக்கும் சர்வதேச ரீதியான பொதுப்படைத் தத்துவ விதிகள், பாரபட்சமற்ற தன்மை, குறியிலக்குத்தெளிவு, தனிப்பட்டவிருப்பின்மை, ஆக்கபூர்வமான சர்வதேச நிதான பேச்சுவன்மை மற்றும் ஒத்துழைக்கும் தன்மை போன்றவை கொண்ட ஒட்டுமொத்த இயல்பு மாற்றமுறாது நிலையான ஒன்றாகவே இருக்குமென கூறிய அவர், இலங்கைக்கெதிரான ஐநா ம.உ.ச வினது அரசியல் நோக்குடன் கூடிய தீர்மானத்தை நாம் அங்கீகரிக்காத போதிலும் சபையினது வழமையான பொறிமுறைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி அடுத்தமாதம் இடம்பெறவிருக்கும் 'ICCPR' நடைமுறையின் கீழ் இலங்கையின் 5ஆவது பருவகால அறிக்கையாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து மிகுந்த ஆர்வத்துடன் தொடர்ந்தும் செயலில் ஈடுபட் டிருப்பதாக மேலும் கூறியிருந்தார்.

**விசாரணைக்கு இலங்கை ஒத்துழைப்பதையே அமெரிக்காவும் இங்கிலாந்தும் விரும்புகின்றன**

மனிதவுரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் 'OHCHR' நடத்தப்படும் இலங்கைப் போர் மீதான விசாரணைக்கு இலங்கை அரசு ஆதரவு அளிக்க வேண்டுமென முன்னரே அமெரிக்காவும் பிரித்தானியாவும் இலங்கையை ஊக்கப்படுத்தியிருந்தன.


ஜெனீவாவில் இருக்கும் ஐ.நா.விற்கான அமெரிக்க தூதராகிய கெய்த் ஹாப்பர் அந்த அமர்வின் போது சமர்ப்பித்த அறிக்கையின் போது முன்னால் ஐ.நா. மனிதவுரிமைகள் உயர் ஆணையாளர் அவர்களை இலங்கை விடயத்தில் அவர் கையேற்றிருந்த பங்கிற்காக தனது உரையில் பாராட்டியிருந்தார். மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத் தலைமையில் இருந்த அவர் பாலியல் மற்றும் பாரபட்சமான அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும் மனிதவுரிமை மீறல் சம்பந்தமான வன்செயல்களை உலகத்தின்அவதானிப்பிற்குகொண்டு வந்ததுடன் விசேடமாக இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் மட்டில் தெளிவான நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கும் மனிதவுரிமைகளை மதிப்பதற்குமான செயற்பாடுகளை ஊக்குவித்தும் வந்த அவர்களை பதவியிலிருந்து வெளியேறும் இத்தருணத்தில் பாராட்டுவதுடன் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் கூறியிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மட்டிலான 'OHCHR' ன் அறிக்கையும் இலங்கைமீதான போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென புதிய 'OHCHA' அலுவலக உயர் ஆணையாளர் மீண்டுமொரு தடவை அவ்வரசினைகோர வேண்டுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

அதேநேரம் ஜெனீவாவிலுள்ள பிரித்தானிய தூதுக்குழு, 'OHCHR' உயர்ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஆதரவு அளிக்க வேண்டும் என விடுக்கப்பட அழைப்புகளுக்கு தனது ஆதரவையும் வெளிப்படுத்தியது. ஐ.நாவுக்கான தூதுவரும் நிரந்தர பிரதிநிதியுமான பிரித்தானிய தூதுக்குழுவைச்சேர்ந்த கரென் பியர்ஸ், விசாரணைக்கு ஒத்துழைப்பவர்கள் அச்சம், அச்சுறுத் தல்கள் அல்லது பழிவாங்கல் இல்லாது அதனை மேற்கொள்ளும் விதத்தில் அனு சரணையளிப்பதுடன் அந்நடைமுறைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கை தனது பங்கினை ஆற்ற முடியுமென ஊக்குவித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்போர் மட்டிலான மனிதவுரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் 'OHCHR' நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையிலான வாய்மூல அறிக்கை கடந்த 24ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட போது சர்வதேச நாடுகளினதும் ஒருமித்த பார்வை இலங்கை மீது கொண்டு வரப்பட்டது. இந்த வருடம் மார்ச் மாதத்தில், மனிதவுரிமைகள் சபையில் அமெரிக்கா அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்.மூலம் இலங்கை மட்டில் விசாரணையை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட ஆணை அதிகாரத்தினை ஏற்கனவே நிராகரித்திருந்த இலங்கை இப்போது பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டிற்குள்ளாகியிருக்கிறது. (முற்றும்)

**தமிழில்: யோகர்**



**சர்வதேச தொண்டர் நிறுவனங்களால் இலங்கை மீது சுமத்தப்படவிருக்கும் அதிகரித்த அழுத்தம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.**

# பதவிகளைத் தேடி ஓடுகின்ற அரசியல்வாதிகள் அதிகரிப்பு

## அமைச்சர் ராஜித ஆதங்கம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது உண்மையான அரசியல்வாதிகள் இல்லை. மாறாக பதவிகளைத் தேடி ஓடும் அரசியல்வாதிகளே அதிகரித்து வருகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒரு சிலரே உண்மையான அரசியல்வாதிகள். உண்மையான அரசியல்வாதிகள் நாட்டில் குறைந்துள்ளதால், பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

அந்த காலத்தில் அரசியல்வாதிகள் இருந்தனர். அவர்கள் சிறந்த பண்புகளை கொண்ட அரசியல்வாதிகளாக காணப்பட்டனர். அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளும் அமைச்சர் பதவிகளும் கிடைத்தன.

எனினும் அவர்கள் பதவிகளின் பின்னால் செல்லவில்லை. அவர்கள் சிறந்த அரசியல்வாதிகளாக செயற்பட்டனர்.

அவர்கள் இருந்த காலத்தில் நாட்டில் சிறந்த கொள்கைகளும், நிலைப்பாடுகளும் காணப்பட்டன. இன்று அப்படியான நிலைமையில்லை.

அரசியலில் தற்போதுள்ளவர்களின் நோக்கம் அதிகாரம் மற்றும் சொத்துக்களை சேகரிப்பது மாத்திரமே. இவற்றை சேகரிப்பதே அரசியல் என்று எண்ணிக கொண்டிருக்கின்றனர். இதனை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது.

இப்படியான நாடு ஒன்றுக்கு முன்னோக்கி செல்ல முடியாது.



இதனால், இதனை தூய்மைப் படுத்தும் நாள் ஒன்று வரும். அப்போது அந்த போராட்டத்திற்கு எனது வயது பாதிப்பாக அமையாது என வும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (இ)

# மான் இறைச்சியுடன் நாயின் இறைச்சியும்

## அம்பாந்தோட்டையில் சம்பவம்

அம்பாந்தோட்டையில் மான் இறைச்சியுடன் கலந்து நாய் இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருவதை வனப்பாதுகாப்புத்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

ஜனாதிபதியின் சொந்த ஊரான அம்பாந்தோட்டைப் பிரதேசம் வரட்சிக்குப் பெயர் போன பகுதியாகும்.

தற்போது அங்கு நிலவும் கடும் வரட்சி காரணமாக குடி தண்ணீருக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளதுடன், நீர் நிலைகளும் வற்றியுள்ளன.

இந்நிலையில் நீரைத் தேடி வரும் மான் உள்ளிட்ட காட்டு விலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்துவரும் நடவடிக்கையில் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் குழுவொன்று ஈடுபட்டுள்ளது.

இவர்கள் அதிக வருமானம் ஈட்டும் மான் இறைச்சியுடன் நாய் இறைச்சியையும் கலந்து விற்பனை செய்து வருவதாக வனத்துறையினருக்கு அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அம்பாந்தோட்டை தம்மென்னாவை குளக்கரையோரம் அவ்வாறு இறைச்சிக்காக கொல்லப்பட்ட நாய்களின் தலைகள் மற்றும் கால் பகுதிகளை வனத்துறையினர் கண்டெடுத்துள்ளனர்.

இதற்கிடையே சட்டவிரோத வேட்டையாடுதல் மற்றும் மான் இறைச்சியில் நாய் இறைச்சியைக் கலந்து விற்பனை செய்தல் என்பவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் வனத்துறையினர் ஆளுங்கட்சியினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

– இளங்கோவடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாண்டிய மன்னனின் தீர்ப்பே நாடு பற்றி எரியக் காரணம்

பாண்டியநாடு பற்றி எரிந்ததற்கு ஒரு காற்சிலம்பே காரணமாயிற்று. கோப்பெருந்தேவியின் காற்சிலம்பு காணாமல் போனதன் காரணமாக இத்துணை நிட்டூரம் நடந்தேறியது எனலாம்.

ஆம், கோவலன் தன் மனைவியின் காற்சிலம்பை விற்பதற்காக எடுத்து வருகிறான். மன்னன் பாண்டியனுக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட, கோவலன் வைத்திருந்த காற்சிலம்பை கோப்பெருந்தேவியினுடையது எனக் கருதப்பட்டு கோவலன் கொல்லப்படுகிறான்.

காற்சிலம்புகளின் வித்தியாசத்தை மன்னன் பாண்டியன் அறிந்திருந்தால் ஒரு தவறான தீர்ப்பை அவன் வழங்கியிருக்க மாட்டான்.

என்ன செய்வது! பாண்டியநாடு பற்றி எரிய வேண்டும் என்பது நியதியாகிய போது அதனைத் தடுக்கவும் தவிர்க்கவும் ஒருவராலும் முடியவில்லை. இதன் காரணமாக பாண்டிய மன்னன் உயிர் துறக்க; பாண்டிமாதேவி உடன் கட்டையேற; வளம் பொருந்திய பாண்டிய நாடு எரியுறல் ஆயிற்று.

பாண்டிய மன்னன் வழங்கிய தீர்ப்பின் முடிவு என்னாயிற்று என்பதற்கு அந்த நாடு சாட்சியம். எனவே தீர்ப்பு வழங்கும்போது அதனை வழங்குபவர்கள் மிக நிதானமாகத் தீர்ப்பை வழங்குவது மிகவும் அவசியம்.

தான் வழங்குகின்ற தீர்ப்பு எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பதை ஆய்ந்தறிந்து தீர்ப்பு வழங்குவதும் கட்டாயமானதாகும். இந்தத் தீர்ப்பு தனக்கு புகழையும் பெயரையும் தருமென்றெண்ணி வழங்கப்படுமாயின் அதுவே தீர்ப்பு வழங்கியவரை அழிக்கவும் கூடும்.

தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை தமிழகம் முழுவதையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

செல்வி ஜெயலலிதாவைப் பொறுத்தவரை தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர்.

அவர் குற்றம் செய்திருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் அவரை தமது தலைவராக ஏற்றுக் கொள்வதற்கு தமிழக மக்கள் தயாராக இருக்கின்றனர்.

ஜெயலலிதா தமிழகத்தில் தோல்வியுற்ற ஒருவராக இருந்திருந்தால் நிலைமை வேறு. ஆனால், அவர் தமிழகத்தின் முதலமைச்சர் என்பது மட்டுமன்றி, நடந்து முடிந்த இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றவர்.

எனவே, அவருக்கு தமிழக மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அமோக ஆதரவு என்பது பலமானது.

அதிலும் செல்வி ஜெயலலிதாவுக்கு தமிழகத்தில் உள்ள ஒரு நீதிமன்றம் மேற்படி தண்டனையை வழங் கியிருந்தால், அதுபற்றிய பார்வைகளும் விமர்சனங்களும் வேறுபட்டிருக்கும். உடனடியாகவே அவர் பிணையெடுப்பதற்கான ஏற்பாடு களும் நடந்திருக்கும்,

ஆனால், இங்கு கர்நாடக மாநிலத்தின் பெங்களூர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியதால் கர்நாடக மாநிலம் தங்கள் முதல்வரை வஞ்சித்துவிட்டது என்று தமிழக மக்கள் நினைக்கும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

இத்தகையதொரு நிலைமை தமிழகம் தனிநாடாக மாறவேண்டும் என்ற மனஉணர்வை நிச்சயம் ஏற்படுத்தக் கூடியது.

எதுவாயினும் செல்வி ஜெயலலிதாவின் பிணை மனு தொடர்பில் நடக்கும் கால இழுத்தடிப்புகள் இந்திய தேசத்தின் ஒற்றுமையை உடைக்கக் கூடிய கலகமாக வெடிக்கலாம் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிடுவது அவசியம்.

# நிதி மோசடியில் ஈடுபட்ட நபரினை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கரணவாய்)

யாழ்.நெல்லியடி துன்னாலைப் பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிதி சேகரிப்பதாக கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட நபரொருவர் கடந்த 26ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நெல்லியடி துன்னாலைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் நிதி சேகரித்துள்ளார்.

இதேவேளை அந்நபர் பொது மக்களிடம் தான் வெளிநாட்டில் இருந்து வந்துள்ளதாகவும் கடந்த யுத்தத்தின் போது அநாதையானவர்கள் மற்றும் அங்கவீனர்களுக்கு உதவி செய்ய முன் வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தான் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த நிதி முழுவதையும் அநாதைகளுக்காகவும் அங்கவீனர்களுக்காகவும் செலவிட்டுள்ளேன் எனவும் எனது பணம் போதவில்லை என்பதால் தான் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரித்து உதவ முன்வந்துள்ளேன் எனவும் பொது மக்களிடம் அந்நபர் தெரிவித்துள்ளார்.

இதனைநம்பியுள்ள பொதுமக்கள் தம்மால் இயன்ற நிதியைக் கொடுத்து உதவியுள்ளனர்.

துன்னாலைப் பகுதியில் நிதி சேகரித்து கொண்டிருந்த வேளை பொதுமகன் ஒருவரது விசாரணையின் மூலம் இருந்து அந்நபர் பொதுமக்களிடம் வசமாக சிக்கியுள்ளார்.

இதனையடுத்து பொதுமக்கள் அந்நபரை பிடித்து வைத்துக்கொண்டு நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற நெல்லியடிப் பொலிஸார் அச் சந்தேக நபரை கைது செய்து விசாரணைநடத்தியபின்பு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் மேலதிக விசாரணையின் பின் அச் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன்படி பிரஸ்தாப நபர் நீண்ட நாட்களாக இக் குற்றச் செயலில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவந்தது.

இதேவேளை குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-60)

## கன்ரர் ரக வாகனமும் ஆட்டோவும் விபத்து

## மூவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று காலை பயிற்சியில் ஈடுபட்டிருந்த முச்சக்கர வண்டியொன்று பிறிதொரு வாகனத்தில் மோதுண்டதில் மூவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் தெரியவருவதாவது.

தாண்டிக்குளம் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக சாரதி பயிற்சி நிலையங்களினால் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சாரதி பயிற்சி நிலையமொன்றின் முச்சக்கரவண்டியைப் பயிற்றுவிப்பாளருடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் ஏ9 வீதியில் முச்சக்கர வண்டியை பயிற்சியில் ஈடுபட்டவர் திருப்ப முற்பட்டவேளையில் பின்னால் பயணித்த கன்டர் ரக வாகனம் மோதியதிலேயே மூவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க சமாசம் நடத்தும் வாணி விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ

---

(யாழ்ப்பாணம்)

யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் வாணி விழாக் குழுவினரால் வாணி விழா இன்று வியாழக்கிழமை மிகச் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் நவராத்திரியும் நாமும் எனும் தலைப்பில் உலக சைவத் திருச்சபையின் யாழ்.மாவட்ட சமயத்துறைத் தலைவர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ

## மிருதங்க வகுப்புக்கள்

நல்லைக்குமரன் இசை மன்றத்தின் மிருதங்க வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை விஜயதசமியன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள். வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றுபவர்கள் யாவரும் மணல்தறை ஒழுங்கை, சுவாமி அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள நல்லைக் குமரன் இசை மன்றத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இயக்குநர் சி. துரைராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (இ

## செயன்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் முதலாம், இரண்டாம் தடவையாக தோற்றிய க.பொ.த உயர்தர 2014 மாணவர்களுக்கு மனையியல், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமையிலிருந்து வழங்கப்படும்.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து பெற்றுக் [illegible] (இ


## நவராத்திரி பாமாலை

அரும் பெரும் கொடை
எத்தனை செல்வங்கள் இந்த
உலகத்தில் இருந்தாலும்
உன் கல்வி எனும் அழகிய
செல்வம் எதற்கும் ஈடாகாது
நீ கொடுத்த இந்தக் கொடையானது
எத்தனை காலங்களுக்கும்
நிலைத்து நிற்கும் அரும் பெரும் கொடை

சி.தர்சிகன்
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி





## சத்திய தரிசனம்

### அன்பை விதைப்போமே

❖ புத்தக அறிவு மட்டும் போதாது. அனுபவ அறிவைத் தேடுங்கள். அதுவே முன்னேற்றத்தை தரும்.

❖ இயற்கை அன்னையை மதியுங்கள். அதைப் பாதுகாத்து வருங்கால சந்ததிக்கு வழங்க வேண்டியது நம் கடமை.

❖ செல்லும் இடம் எல்லாம் அன்புப் பயிரை விதையுங்கள். உங்களால் இந்த உலகம அன்பு மயமாகட்டும்.

❖ கோபத்தில் எந்த செயலிலும் ஈடுபடாதீர்கள். கோபம், பதட்டம், வேகம் மூன்றும் சேர்ந்தால் மனக்குழப்பமே மிஞ்சும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பின்பற்றக்கூடாதவை

+ தண்ணீரை வீணாக்கினால் நம் பணம் வீணாகும் என்பது சீனர்களின் நம்பிக்கை. அதை நாமும் பின்பற்றித் தண்ணீரை வீணடிக்கக்கூடாது
+ வீட்டில் உத்திரம் தற்போது பீம் ஆகியவற்றுக்கு நேராகப் படுக்கக்கூடாது.
+ தன் இடது கையால் தானே சாப்பாடு பரிமாறிக்கொள்ளக்கூடாது.
+ துன்பம் வரும்போது மனதை விட்டுவிடக்கூடாது. எதிர்த்துப் போராட வேண்டும்.
+ பெண்கள் தலைமுடியை விரித்துக்கொண்டு வாசற்படி தாண்டக்கூடாது.
+ தனது இடது கையால் எண்ணெய் தேய்த்துக்கொள்ளக்கூடாது. செய்தால் புத்திரநாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரம் -2014


யாழ். பல்கலைக்கழகம்


சென.ஜோன்ஸ் கல்லூரி


ஸ்ரீ காமாட்சி விக

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரச் சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம் முதலாமிடத்தையும் சென். ஜோன்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழகம்



மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கரம் அணியினரால் ஒழுங்கமைக்கப் பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டி செப்டெம்பர் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வுக்கு ஹரிகணன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் ராஜ்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இச்சுற்றுப்போட்டியில் 6 அணிகள் பங்குபற்றின.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி ஸ்ரீ காமாட்சி அணியுடன் மோதியது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ஆர்.ஜீ.சி. ஜெயதிலக ஸ்ரீ காமாட்சி அணியின் எஸ். செலிஸ்ரனுடன் மோதி 31:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த எஸ். எம். கருணாரட்ன ஸ்ரீ காமாட்சி அணியின் எம். சோபாநந்துடன் மோதி 27:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வி. டினேஸ்குமார ஸ்ரீ காமாட்சி அணியின் எம். குகதீபனுடன் மோதி 26:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

3:0 என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி ஸ்ரீ காமாட்சி அணியினரை வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென் .ஜோன்ஸ் கல்லூரியும் கே.சி.சி.சி அணியும் மோதியது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கே.சி.சி.சி அணியின் எஸ். குமரேசன் சென் .ஜோன்ஸ் கல்லூரியின் எஸ். பிரவீன்சனுடன் மோதி 28:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் எஸ். மிதுஸன் கே.சி.சி.சி அணியின் ஆர். வேந்தனுடன் மோதி 26:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் எம். அபினாஸ் கே.சி.சி.சி அணியின் எஸ். வல்லவகுமரனுடன் மோதி 26:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் கே.சி.சி.சி அணியின் எஸ். குமரேசன், எஸ். நியூட்டன் குழுவினர் சென.ஜோன்ஸ் அணியின் பி.இ. டெனுரஸன், எஸ். பிரவீன்சன் குழுவினருடன் மோதி 28:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

இரண்டாவது இரட்டையர் ஆட்டத்தில் சென் .ஜோன்ஸ அணியின் எஸ். யூட்மன், எம். அபினாஸ் குழுவினர் கே.சி.சி.சி அணியின் எஸ். வல்லவக்குமரன், ஜி. டிஷாந் குழுவினருடன் மோதி 31:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

5 போட்டிகளில் 3 போட்டிகளில் சென் .ஜோன்ஸ கல்லூரி அணியினர் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஸ்ரீ காமாட்சி அணியினரும் கே.சி.சி.சி அணியினரும் மோதிக் கொண்டனர்.

முதலாவது ஒற்றையர் ஆட்டத தில் கே.சி.சி.சி அணியின் எஸ். குமரேசன் ஸ்ரீ காமாட்சி அணியின் எம். சோபானந்துடன் மோதி 24:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில ஸ்ரீ காமாட்சி அணியின் எஸ். செலிஸ்ரன் கே.சி.சி.சி அணியின் ஆர். வேந்தனுடன்மோதி 25:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்ரீ காமாட்சி அணியின் ரி. அனுராம் கே.சி.சி.சி அணியின் எஸ். வல்லவக்குமரனுடன் மோதி 28:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

5 போட்டிகளில் 3 போட்டிகளில் ஸ்ரீ காமாட்சி அணி வெற்றி பெற்று மூன்றாம இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியின்ரும் சென. ஜோன்ஸ கல்லூரி அணியினரும் மோதிக் கொண்டனர்.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியின் ஆர்.ஜி. சி. ஜெயதிலக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் எஸ். பிரவீன்சனுடன் மோதி 31:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியினைச் சேர்ந்த வி. டினேஷகுமார சென. ஜோன்ஸ கல்லூரியின் எம். அபினாசுடன் மோதி 25:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்திலும் யாழ். பல்கலைக்கழக அணியினர் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இச் சுற்றுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சோமஸ்கந்தன் சுதாகர் கலந்து கொண்டு சிறப்பித்தார். (க)

# தேசிய ரீதியான உதைபந்தாட்டம்; இளவாலை ஹென்றியரசர் இரண்டாமிடம்

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுககு இடையேயான உதைபந்தாட்டத்தில் 17வயது பிரிவில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியினர் இரண்டாம் இடத்தை (RUNNER UP) பெற்றுக் கொண்டனர்.

இப் போட்டிகள் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றன.

இவ் அணியினர் ஏலவே கோட்டம்( Divisional), வலயம்( Zonal),மாவட்டம்(District) மாகாணம்(Provincial) ஆகிய நிலைகளில் முதலாம் இடத்தை (CHAMPION)பெற்ற போதிலும் தேசிய மட்ட இறுதி போட்டியில் சமநிலை அடைந்து தண்ட உதையில் தேசிய மட்ட கிண்ணத்தை தவறவிட்டனர்.

இடம்பெற்ற முதலாவது போட்டியில் மாவனல்ல ஷாகிரா முஸ்லிம் மகா வித்தியாலய அணியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதியது.

இப் போட்டியில் 3:1 என்னும் கோல் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

2ஆவது சுற்றில் காலி மகிந்த கல்லூரியை எதிர்கொண்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அந்தப் போட்டியிலும் 3:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்த போட்டியில் மட்டக்களப்பு அலிக்கார் வித்தியாசாலையினை எதிர்கொண்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து அரையிறுதிப் போட்டியில் திருகோணமலை அல்மிஷ்ரா மகா வித்தியாலயத்தை 1:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டியில் வென்னப்புவ சென். ஜோசப் கல்லூரியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணியினரும் ஆரம்பம் முதல் கோல் போட முயற்சித்தனர்.

இருந்தும் கோல் போடும் முயற்சிகள் சாத்தியமாகாமையால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட அதனை சாதகமாக்கிய வென்னப்புவ சென். ஜோசப் கல்லூரி 3-2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனால் தேசிய மட்ட 17வயது பிரிவில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியினர் வெள்ளிப்பதக்கத்தை இரண்டாம் இடத்தை (RUNNER UP) பெற்றுக் கொண்டனர். (க)



கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற கே.சி.சி.சி. அணியினரை படத்தில் காணலாம்.



## இன்றைய ஆட்டம்

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். லீக்கின் அனுசரணையுடன் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியை நடத்துகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு.

மாலை 4 மணிக்கு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழகமும் மாலை 5 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை இலங்கையில் தொடர்ந்து நீடிப்பு

## மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக கப்படாத நிலைமை இலங்கையில் நீடித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கமிட்டியில் சமர்ப்பிக்கப்பட்ட 40 பக்க அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

2012-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை கண்காணிப்பாளர்கள் பாதுகாவலர்கள் இலங்கையில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனால், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினரிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாட்சியமளித்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது சாட்சியமளித்தவர்கள் இலங்கையில் நெருக்குதல்களை எதிர்நோக்கக் கூடும் என்ற காரணத்தினால் அவர்களின் பெயர் விபரங்களை வெளியிடப் போவதில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைமை பலவீனமானதாகக் காணப்படுகின்றமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

சிறுபான்மை சமூகத்தினர் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

# மணிவிழா தந்தவர்க்கெம் மனமார்ந்த நன்றிகள்



மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தலும், கண்ணினால் அவர்தம் விழாப்பொலிவு கண்டார்தலும் தான் மண்ணினிற் பிறந்தார் பெறும் பெரும் பயன் என்ற உண்மையை சிந்தை வைத்து இறைகளடி பாடும் அடியார்க்கு அடியேனின் அகவை அறுபது நிறைவு மணிவிழாவை பெருவிழாவாக நடத்தியும்,

இருநூல்களை வெளியீடு செய்தும், வருகைதரு அனைத்து மெய்யடியாரும் வயிறார அருந்த அறுசுவை விருந்தளித்தும் சிறப்புச் செய்ய முனைப்போடு செயலாற்றிய விழாக் குழுவினரான "சொல்லின் செல்வர்" இரா.செல்வவடிவேல், "செல்லும் சொல்லர்" க.சோமசேகரம், சிவத்திரு எஸ்.வெற்றிவேலாயுதம், சிவத்திரு க.கு.சிவபாலன், அமைதியாகப் பணியாற்றிய நயினை.கி.கிருபானந்தா ஆகியோருக்கும்,தலைமையேற்று நடாத்திவைத்த யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கட்கும், இரு நூல்களுக்கு மட்டுமல்லாது நேரிலும் வருகைதந்து தமது மேலான ஆசியுரைகளையும்,வாழ்த்துரைகளையும் தந்தருளிய ஆதீனமுதல்வர்கள், மடாதிபதிகள், அந்தணப் பெருமக்கள், சிவாச்சாரியார்கள், புலமையாளர்கள் யாபேருக்கும், வெளியீட்டுரை, அறிமுக உரை, வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த பேராசிரியர்கள் , கல்விமான்கள் முதலியோருக்கும், முதற்பிரதியைப் பெற்றுக் கௌரவப்படுத்திய "கல்விக் காருண்யன்" இ.ச.பே.நாகரத்தினம் அவர்கட்கும், சிறப்புப்பிரதிகளைப் பெற்று ஊக்கப்படுத்திய அனைவருக்கும் சபைக்குச் சிறப்புச் செய்ய வருகைதந்து அடியேனைக் கௌரவப்படுத்திய ஓய்வுநிலை நீதிபதிகள்,பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆலய அறங்காவலர்கள்,உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாபேருக்கும், விழாச்செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள், சிறப்பு மலரைவெளி யிட்டு கௌரவப்படுத்திய"வலம்புரி"பத்திரிகை நிர்வாகிகள்,பணியாளர்கள், யாபேருக்கும், நூலையும் முன் அட்டைகளையும் வடிவமைத்துதவிய யாழ்.சுமி, கொழும்பு சத்யா ஆகியோருக்கும், அச்சேற்றி உதவிய திருவள்ளுவர் அச்சகத்தார்க்கும் திருநெறிய தமிழிசை பாடிய கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தர், அரங்கை அணிசெய் கலைஞர்கள், தேனமுத அரங்கை அலங்கரித்த இசைமாமணி எஸ்.குமாரசாமி , அணிசெய் கலைஞர்கள் ஆகியோருக்கும்,அறுசுவை அமுதூட்டும் பணிக்காக அயராது உழைத்த வியாவில் ஐயனார் ஆலய இளந்தொண்டர் அணியினருக்கும்,

இவ்விழா வண்ணமயமாக நடைபெற நிதியுதவியும், இன்னும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த யாபேருக்கும், சைவபரிபாலன சபையினருக்கும், அடியேனதும் குடும்பத்தாரினதும் உளநிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு,

இவ் அன்பு நெஞ்சங்களில் மூத்தோரின் திருவடிகளை மனமொழி மெய்களால் வழுத்தியும், இளையோரை பல்லாண்டு வாழ வாழ்த்தியும்,விழாப் பொலிவு கண்ட யாபேரும் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுச் சிறப்போடு வாழவும் இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

74-12 இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இராசையா குகதாசன்,
குக[illegible]
தம்பதிகளும் [illegible]

(7933)

# கண்ணீர்ப் பூக்கள்

## நவரட்ணம் துசிகேசன்



எனது அன்புச் செல்வம் துசிக்குட்டியே! - நீ
குழந்தைப் பருவம் முதல் - எம்மோடு
அன்பு மழலை பொழிந்து எமது
அரவணைப்பில் இருந்தாய்
கல்வி கற்று சிறந்த பெறுபேறுபெற்று
பல்கலைகழக அனுமதியும் பெற்று - எம்மை
மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினாய் - தினமும்
எம் இல்லம் தேடி வந்து நீ எம்மோடு
உறவு கொள்வாய். கண் இமைக்கு
நேரம் பார்த்து காலன் அவன் - உனை
கவர்ந்து சென்றதேனோ! - இனி மேலும்
உம்மை இப்பிறவியில் எங்கு
காண்போம்!

உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 28.12.1991
மறைவு 01.10.2014

இல.11 முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (7934)

உம் பிரிவால் துயருறும்
பசுபதி விஜயலட்சுமி (சின்னக்கிளி)
அம்மம்மா குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி முத்துராசா மகேஸ்வரி

88/2 பத்திரகாளி வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா - மகேஸ்வரி நேற்று (01.10.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொ.வைத்திலிங்கம் - சின்னத்தங்கச்சியின் அன்பு மகளும், க.முத்துராசாவின் அன்பு மனைவியும், ஜெசிந்தா, ஜெர்மிலா, உஷா, உஷாந்தினி, சசிகலா, சசிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணராசா, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, கமலராசா, அருணேஸ்வரி, சிவராசா, தயாளன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தகுமாரின் அன்பு மாமியும், அஸ்மிதா, மகிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.10.2014) வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
க.முத்துராசா(கணவர்)

(7935)

## அமரர் செல்லையா இலட்சுமிப்பிள்ளை

புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்லையா இலட்சுமிப்பிள்ளை நேற்று (01.10.2014) புதன்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் செல்லையாவின் அன்பு மனைவியும், பிறேமராணி, பிறேமரஞ்சினி, சசிந்திரா (ஆதார வைத்திய சாலை பருத்தித்துறை), பிறேம்ராஜ் (ஜேர்மனி), பிறேமவதனி (ஜேர்மனி), பிறேமராகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் நடேசு ஜெகதாசன் மற்றும் கிருபாகரசூரியன் (ஊடகவியலாளர்), செல்வ்ராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெபினா, பிறேமினா, பிகட்லஸ், சுரேந்திரா, விஜேந்திரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் இன்று (02.10.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மருமகன் - இளையப்பு கிருபாகரசூரியன்
(ஊடகவியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவை விமர்சன...

உள்ள சில அரசாங்க எலிகள் கிளம் பியுள்ளதை பார்க்கும் போது விசித் திரமாக இருக்கின்றது.

ஜெயலலிதா எட்டு கோடி மக்களின் முதலமைச்சர் என்பதையும், தமிழக மக்களின் அறுதி பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ள, இந்திய நாடாளுமன்றத்தின் மூன்றா வது பெரிய கட்சியின் தலைவர் என் பதையும் இந்த எலிகளுக்கு நான் ஞாபகமூட்டுகின்றேன்.

முன்னாள் தமிழக முதல்வர் தவறு இழைத்துள்ளாரா, இல்லையா என் பது பற்றி இந்திய நீதித்துறை தீர் மாணிக்கட்டும். நீதித்துறைக்கு முகங் கொடுக்க அதிமுக சட்டப்பிரிவு, பிரபல இந்திய சட்ட அறிஞர் ராம் ஜெத் மலானி தலைமையில் அணி திரண்டுள்ளது. அதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என ஜன நாயக மக்கள் முன்னணியின் தலை வர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங் கள, தமிழ் மொழிகளில் உரையாற் றிய மனோ கணேசன் மேலும் கூறிய தாவது,

உலகம் ஒரு மத பயங்கரவாதி யாக அடையாளம் கண்டுள்ள சர்ச் சைக்குரிய மியான்மார் நாட்டு மத தலைவர் விராது தேரரை இன்று இந்த நாட்டுக்குள்ளே சர்வ மரியாதைகளுடன் அழைத்து வருகிறீர்கள்.

இந்த நாட்டின் பொது பல சேனா அடிப்படைவாத அமைப்பு, விராது தேரரின 969 என்ற அடிப்படைவாத அமைப் புடன் ஒப்பந்தம் செய்து, ஆவணங் களை பரிமாறிக் கொள்கின்றது.

அந்த மாநாட்டில் பல இனங்கள் வாழும் இலங்கையின் பன்மை தன்மையை குழப்பி விடும் முகமாக, இலங்கையின் பெயரை சிங்ஹலே என மாற்றவேண்டும் என்றும், இங்கு வாழும் மக்களை சிங்ஹல பௌத் தர்கள், சிங்ஹல-தமிழர்கள், சிங் ஹல-இந்துகள், சிங்ஹல-முஸ்லிம் கள், சிங்ஹல-கிறிஸ்தவர்கள் என அழைக்க வேண்டும் என்றும், தேசி யக்கொடியை இன்னமும் சிங்கள பௌத்த மயமாக்க வேண்டும் என வும் கருத்துகள் கூறப்படுகின்றன.

வெளிநாட்டு விராது தேரின் ஆலோசனைகளின்படி நமது நாட் டில் நடைபெறும் இவை அரசாங்கத் தின் கண்களுக்கு சட்டமீறல்களாக, குற்றங்களாக தெரியவில்லை. ஆனால், வெளிநாட்டு அரசியல் தலைவர் முன் னாள் முதல்வர் ஜெயலலிதா தொடர் பில் அவரது நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் குற்றங்களாக அரசாங் கத்தின் கூட்டு கட்சிகள் சிலவற்றுக்கு தெரி கின்றன.

எனவே ஜெயலலிதா பற்றி அவசரப் பட்டு தெரிவிக்கப்படும் அரைவேக்காட்டு கருத்துகளை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இலங்கை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வில்லை. இலங்கை மக்களின் வரிப் பணத்தை கொள்ளையடித்தார் என குற்றஞ்சாட்டப்படவில்லை.

எனவே அவரைப்பற்றி கருத்து கூறு முன் இவர்கள் தங்களை திருத்தி கொள்ள வேண்டும். மாநிலத்திலும், தேசிய நீதி யாகவும் பலமான ஒரு அரசியல் தலை வரையும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் இந்திய நீதித்துறையை பார்த்து பாடம் படிக்க வேண்டும்.

இலங்கையில் நீதித்துறையின் சுதந் திரத்திற்கு அரசாங்கத்தினால் ஏற்படுத் தப்பட்டுள்ள அச்சுறுத்தலை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதிமுக தலைவர் ஜெயலலிதா தனது ஆட்சிகாலத்தில் இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்திருந்தார்.

இதுவே இவர்களது கோபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

அதிமுக தலைவர் ஜெயலலிதா அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று இவர்கள் எதிர் பார்க்கின்றார்கள். இந்த எதிர்பார்ப்பு நல்ல எண்ணம் கொண்டதுஇல்லை.

இங்கேவாழும் தமிழருக்காக அதி காரத்துடன் குரல் கொடுக்கும் எந்த ஒரு சக்தியும் எந்த ஒரு நாட்டிலும் , குறிப்பாக தமிழ கத்தில் இருக்க கூடாது என்ற எண் ணமே அரசாங் கத்திற்கு உள்ளே நிலவுகின்றது என அவர் தெரி வித்தார். (செ-11)

Organ, Guitar,
புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம் : 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
T.P: 0777031293
(7695)

இன்று முதல் விசேட விலைக்கழிவு
தீபாவளியை முன்னிட்டு சகல விதமான துணி வகைகளுக்கும் றெடிமெட் ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)
021 2222 381
(C-8634)

புலமை கல்வி நிறுவனம்
புதிய புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
சோதிவேம்படி லேன், மானிப்பாய்.
ஆசிரியர் :- திரு.க.கலாமோகன் (B.A, Dip..in..Teach..)
காலம் :- 03.10.2014 வெள்ளிக்கிழமை
தரம் - 5 (தற்போது தரம் - 4) பிரிவு - II பி.ப 4.00 மணி
தரம் - 4 (தற்போது தரம் - 3) பிரிவு - I பி.ப 4.30 மணி
குறிப்பு :- பதிவுகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு முந்துங்கள்.
தொடர்புகளுக்கு - 0772121715, 0214902836
நிர்வாகி, சோதிவேம்படி லேன், (சாயி பாடசாலை அருகாமை) மானிப்பாய்.
(7914)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
After A/L What Next???
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது
Spoken English With Grammar - Quick Learning Course
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.
Diploma In English Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.
B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)
IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.
We gurantee success rate 6.5 band and above
A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)
04th Saturday 2014@8.00 am | 06th Monday2014@9.00 am
05th Sunday 2014@11.00 am | 08th Wednesday2014@3.00 pm
No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
(C-8633) Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

# முதியோர் வாழ உகந்த நாடு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளில் முதியோர் வாழ்வதற்கு மிகவும் உகந்த நாடாக இலங்கை கண்டறியப்பட்டுள்ளது.

96 நாடுகளின் வாழ்க்கைத் தரச் சுட்டி குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய வில் இருந்து இத்தகவல் வெளியிடப் பட்டுள்ளது. ஆய்வின் பின்னரான தரப்படுத்தல்படி இலங்கை 43ஆவது இடத்தை பிடித்துள்ளது.

உலகில் முதியோர் வாழ்வதற்கு மிகவும் ஏற்ற நாடாக நோர்வே தரப் படுத்தப்பட்டுள்ளதுடன் முதியோர் வாழக்கூடிய சூழல் இல்லாத நாடாக ஆப்கானிஸ்தான் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஹெல்ப்ஏஜ் சர்வதேச குளோபல் குறியீட்டு ஆய்வானது சமூகம், பொரு ளாதாரம் மற்றும் சுகாதாரம் போன்ற வற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

உலக சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

2050ஆம் ஆண்டாகும்போது உலக சனத்தொகையில் 21 சதவீதமானவர் கள் 60 வயதை கடந்த முதியவர்களாக இருப்பர் என ஹெல்ப்ஏஜ் சர்வதேச குளோபல் குறியீட்டு ஆய்வு குறிப்பிடுகிறது.

முதியோர் வாழக்கூடிய உகந்த நாடுகள் பட்டியலில் நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, கனடா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகள் உள்ளன. (செ-11)

# ஹயஸ் விப...

ஒன்றில் தனது தந்தைக்கு சிகிச்சை அளிப்பதற்காக அழைத்துச் சென்ற யாழ் கொட்டடிப் பகுதியில் சேர்ந்த நவரட்ணம் துசிகேசன் (வயது 23) என்ற இளைஞரே விபத்தில் உயி ரிழந்தார்.

உயிரிழந்த இளைஞரின் தந் தையும், நண்பரும் காயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்ஜீசிஈ. உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல் கலைக்கழகத்துக்கு தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கூட்டமைப்பின் கோரிக்...

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தில் பங்கேற்க ஜனாதிபதி அமெரிக்கா சென்றிருந்த போது இந்தியப் பிரத மரை சந்தித்துப் கலந்துரையாடலில ஈடுபட்டார்.

இந்த சந்திப்புக் குறித்து அமைச் சரவையில் உரையாற்றிய போதே மகிந்த இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்துமாறு மட்டுமே என்னிடம் தெரிவித்தார். அத் துடன் பேச்சுக்காக விசேட பிரதிநி தியை இந்தியா நியமிக்க வேண் டும் என்ற கூட்டமைப்பினரின் கோரிக் கையைத் தான் நிராகரித்திருந்தார் என்பதையும் மோடி தனக்குத் தெளிவுபடுத்தினார் என தெரிவித் தார்.

மேலும் இந்தியா ஒருபோதும் இலங்கைக்கு விரோதமாக செயற் படாது எனவும் மோடி தன்னிடம் உறுதியளித்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# குடும்ப ஆட்சியால் ஊழல்...

சுக்கள் என்ற நிலையிலேயே இருக் கின்றது.

அரசியல் அமைப்பின் 57வது பிரிவின்படி ஜனாதிபதி, நிதி அமைச் சர் ஒருவரை நியமிக்க முடியும். எனினும் அந்த அமைச்சை ஜனாதி பதி தனது பொறுப்பில் வைத்து கொண்டு அரசியல் அமைப்பிற்கு எதிராகவே செயற்படுகின்றார்.

நாட்டின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் 75 வீதமான நிதியை கையாளும் பொறுப்பை ஜனாதிபதி தன் கையில் வைத்துள்ளார். இந்த நிதி முழுவதும் துறைமுகம், வீதி நிர மாணத்திற்கே செலவு செய்யப்படு கின்றது.

தனி நபர் கையில் அதிகாரங் கள் குவிந்து கிடப்பதால், நாட்டில் ஊழல், நீதி, ஜனநாயகம், தேர்தல் முதலானவற்றில் தலையீடுகள் அதிகரித்து நாடு சீரழிந்து வரு கின்றது.

நாங்கள் இது சம்பந்தமாக தொடர்ச் சியாக சமர்ப்பித்து வரும் கோரிக் கைகள் கவனிக்கப்படாவிட்டால் மாற்றுவழியை நாடவேண்டிய சூழ் நிலை உருவாகும். அதிகார மயக்கத் தில் இப்பொழுது அரசு தள்ளாடிக் கொண்டு இருக்கின்றது.

ஜனாதிபதியை சுற்றியிருக்கும் பரிவாரங்கள் காரணமாகவே ஜனாதிபதியினால், மக்களின் மனநிலையை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என்றும் அத்துரலிய ரத்ன தேரர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள் ளார். (செ-11)

# மூதாட்டியை...

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை உள்நுழைந்த திருடர்கள், உதவியா ளாரை கட்டிவைத்து, மூதாட்டியை கடுமையாக தாக்கி, பணம் நகை களை திருடி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசார ணைகளை முன்னெடுத்து வரு வதாக பொலிஸார் மேலும் கூறி னர். (செ-11)

# விக்னேஸ்வரன், ஹக்கீ...

துக் கூறுங்கள் என நியாங்கொட விஜித தேரர் அமெரிக்கத் தூது வரிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட நியாங்கொட தேரர், பௌத்த மத குருமாரே இந்நாட்டின் கலா சாரத்தில் முதன்மையானவர்கள்.

தேரர்களைச் சுற்றியே கலாசார மும், சமூக கட்டமைப்புகளும் உரு வாக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டின் பெரும்பான்மையினர் சிங்களவர் களே. அவர்களுக்கு உள்ள உரிமை களையும் சலுகைகளையும் விட தங்களுக்கு அதிகளவில் வேண்டு மென இந்த நாட்டில் வாழும் சிறு பான்மை இனத்தினர் எதிர்பார்க் கக் கூடாது, எதிர்பார்க்கவும் முடி யாது.

இந்நாட்டின் அனைத்து மக்களும பரஸ்பர நம்பிக்கையுடனும், ஒற றுமையுடனும் வாழ வேண்டும் என றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஜெயலலிதா ஜாமீன்...

தான் தயாராக இருப்பதாக பவானி சிங் தெரிவித்தார். ஜாமீன் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

உடனடியாக நீதிபதி, இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்காக இருப்பதால், இதனை விடுமுறைக் கால நீதிபதி யான, தான் விசாரிக்க முடியாது என்றும் வழக்கமாக மேல முறையீடுகளை விசாரிக்கும் நீதிமன்ற அமர்வுக்கு மாற்று வதாகவும் உத்தரவிட்டார்.

கர்நாடக நீதிமன்றங்கள் தசரா (நவராத்திரி) விடுமுறை யில் இருபபதால், விடுமுறை முடிந்து அக்டோபர் 7ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஊடகங்களிடம் பேசிய ஜெயலலிதா தரப்பு வழக்கறி ஞர் குமார், கர்நாடக உயர் நீதிமன்ற வரலாற்றிலேயே, வழக்கை கேட் காமலேயே ஒத்திவைத்தது இது தான் முதல் முறை. தலைமை நீதி பதி தலையிட்டு, ஜெயலலிதாவுக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என்று கூறினார். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org